பலர் புகழ் ஞாயிறு

(சேக்கிழார் அடிப்பொடி)

தொகுப்பாசிரியர்

இரா. சுப்பராயலு

மாமன்னன் பதிப்பகம்,

124, நட்சத்திர நகர்,

தஞ்சாவூர் - 613 005.

நூற்பெயர்	:	பலர் புகழ் ஞாயிறு (சேக்கிழார் அடிப்பொடி)
பொருள்	:	பாராட்டுக் கவிதைகள்
தொகுப்பாசிரியர்	:	இரா. சுப்பராயலு
உரிமை	:	பதிப்பகத்தாருக்கே
பதிப்பகம்	:	மாமன்னன் பதிப்பகம், 124, நட்சத்திர நகர், தஞ்சாவூர் - 613 005.
பக்கங்கள்	:	78
அளவு	:	டெமி 1/8
அச்சாக்கம்	:	மீரா ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி
பதிப்பு நாள்	:	02.09.2014
விலை	:	ரூ. 60/-

சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர்
தி.ந.இராமச்சந்திரன் சதாபிஷேக சிறப்பு வெளியீடு

முன்னுரை

‘பலர் புகழ் ஞாயிறு’ என்ற இத்தொகுப்பின் தலைப்பு திருமுருகாற்றுப் படையை நினைவுபடுத்தும். திருமுருகாற்றுப் படையின் இரண்டாம் அடியில் ‘பலர் புகழ் ஞாயிறு’ என்ற தொடர் வருகிறது. சேக்கிழார் அடிப்பொடி தி.ந.இராமச்சந்திரனாருக்கு இத்தொடர் மிகவும் பொருத்தமானதான்றோ! அவரைப் புகழ்ந்து பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல். ‘பலர் புகழ் ஞாயிறு’ என்ற தொடருக்கு உரை கூறும்போது எச்சமயத்தாரும் போற்றும் ஞாயிறு என்று உரையாசிரியர்கள் பொருள் கூறியுள்ளனர். சேக்கிழார் அடிப்பொடியாரையும் எல்லா சமயத்தாரும் ஏற்றியும் போற்றியும் வந்துள்ளனர். இந்த நூலில் இடம் பெற்றுள்ள புலவர் பி.வி.அப்துல்கபூர் சாஹிப் அவர்களின் பாடல்களே இதற்குச் சான்று பகரும்.

சேக்கிழார் அடிப்பொடியார் ஒரு மாமனிதர் மட்டுமல்லர், அவர் ஓர் இயக்கம். மறைந்து கிடக்கும் இலக்கியங்களைத் தேடி இருளிலிருந்து மீட்டெடுத்து வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் அகழாய்வு இயக்கம். பாரதி காட்டிய வழியில் தமிழ் இலக்கியங்களை உலகெங்கும் பரப்புதற்குப் பாடுபடும் மொழிபெயர்ப்பு இயக்கம். பாரதத்தின் தொன்மையான அருள் நெறியையும் அறநெறியையும் பரப்பும் ஆன்மிக இயக்கம். ஆய்வுத் தடங்களுக்கு ஒளிகூட்டி வழிகாட்டும் அறிவுத் துணை இயக்கம். சைவசித்தாந்தம் தமிழ்ச் சைவத்தின் சொத்து என்பதைப் பறைசாற்றும் சைவத் தமிழ் இயக்கம். அறிவுலகத்தை நூல் வழி அடைவதற்கு நுழைவாயிலாகத்திகழும் நூலக இயக்கம்.

இவரைப் பற்றி இவருடைய மணிவிழா நாளிலும், பவள விழா நாளிலும், பிற விழாக்களிலும் அறிஞர் பெருமக்களும், புலவர் பெருமக்களும் பாடிய வாழ்த்துப் பாக்களும், பாமாலைகளும் தொகுக்கப்பட்டு இங்கு தோரணமாக்கப்பட்டுள்ளன.

சதாபிஷேகம் என்பது, எண்பது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விழா. ஆயிரம் பிறை கண்ட பெருமையைப் போற்றும் விழா. பயனுள்ள வாழ்க்கையை வாழ்ந்த சேக்கிழார் அடிப்பொடியாருக்கு பாவலர்கள் சூட்டிய பாமாலைகளைத் தொகுத்து அவருடைய சதாபிஷேக விழாவில் அணிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மலர் மாலை வாடிவிடும்; பாமாலை வாடாதன்றோ!

இரா. சுப்பராயலு

பொருளடக்கம்

முன்னுரை

1. அம்ருத கவசம் - திருலோக சீதாராம் 7

2. பாமாலை - திருலோக சீதாராம் 10

3. சித்திரகவி மாலை - அப்துல்கபூர் சாஹிப் 12

4. பல்லாண்டு வாழ்க - க.சோமசுந்தரம்பிள்ளை 25

5. மெய்க்கீர்த்தி - இரா.சுப்பராயலு 27

6. வாழ்த்து - சந்தக்கவி நா.இராமசுவாமி 32

7. வாழ்த்துப்பா - இந்து சமயப் பேரவை 34

8. வாழ்த்துப்பா - த.ந.கணபதி 35

9. சேக்கிழார் அடிப்பொடி பிள்ளை தமிழ்
- சந்தக்கவி நா.இராமசுவாமி 36

10. கொடுமுடி - கவிஞர் ஈரோடு தமிழன்பன் 47

11. தி.ந.இரா.நான்மணிமாலை -
முனைவர் சாமி.செல்வவிநாயகன் 49

12. வாழ்த்துப்பா - சந்தக்கவி நா.இராமசுவாமி 66

13. பெருமங்கல வாழ்த்து - வித்துவான் தி.சா.கங்காதரன் 68

14. சித்திரகவி - பாவலரேறு பாலசுந்தரனார் 71

15. வாழ்த்து - இராஜராஜ சமயசங்கம் 72

16. An Infant Voice - Prof.S.A.Sankaranarayanan 74

அம்ருத கவசம்

திருலோக சீதாராம்

ஆரணங்கள் வாய்திறந்து அரற்றா முன்னம்
அற்புதத்துச் சித்திரத்துள் அனங்க னாகிக்
காரணமும் காரியமும் ஒன்றே யாகிக்
காலவெளிக் கூற்றறியாக் கனவே யாகிப்
பேரூரும் அறியாத பித்தே யாகிப்
பெருவெளியின் விளிம்பினிலோர் புள்ளி யாகி
யாரெவரென் றினங்காணாப் பிறவி யில்லா
ஏகாந்த மோனத்துள் இசைக் கீற்றாகி

இழைகின்ற நிழலொளியாய் இருப்போர் தம்மை
இனங்கண்டு மற்றவரோ டிணைந்து கொள்ளும்
விழைவுடனே நெடுங்காலம் விளையாட் டாக
வீதியெல்லாம் திரியுங்கால் சிலரே யென்னைப்
பழகியவன் எனக்கண்டார் பரிவின் என்றன்
பாங்கறியும் துணிவுடனே பக்கல் வந்தார்
மழையாகிச் செம்புலத்தென் உணர்விற் பாய்ந்து
மற்றென்னை மருவியநின் மாண்பார் யாரே!

உயிர்ப்பொருளின் அசைவனைத்தும் வரலா றாகும்
உடனிதனை உணர்வதுவும் அரிதே யாகும்
செயறீர்ந்த செம்பொருளின் நாட்டம் மிக்குச்
செய்கின்ற வேள்வியந்தச் சிறிய வாழ்வு

உயர்நலதது உசாவிஎழும் உணர்வின் தீயில்
ஒத்தியலும் நினதுணர்வென் னுயிரே யாக
அயர்வின்றி ஆடுகின்ற ஆட்ட மிங்கே
அற்புதமாய் இதழ்விரிய அகிலம் காணும்

சிற்றுயிராய்க் குற்றணுவாய்ச் சிறைவி ரித்துச்
செந்தழலாய் நக்கியெழும் சீற்றம் ஆகிப்
பற்றுகின்ற வெளியெங்கும் படர்ந்து நிற்கும்
பருப்பொருளாய்ச் சுமைதாங்கிப் பந்த முற்றுக்
கற்றுநடம் புரிகின்ற கால மென்னும்
கற்பனையில் கடைவிரித்துக் கவிதை யென்னும்
விற்பனைக்குச் சரக்கெடுத்து வீதி யெல்லாம்
விலை கூறி விளையாடிக் களித்தே யானும்

சொல்லெடுத்துச் சூக்குமத்தில் விட்டெ றிந்து
சுட்டபழம் உதிர்க்கின்ற சோலை தன்னுள்
கல்லெடுத்துக் கனியடிப்போர் கவண்கல் பட்டு
கண்பார்வை மங்காமுன், தடிகை யூன்றித்
தொல்புவியில் வழிதடவிச் சோர்ந்தி டாமல்
தோன்றுகின்ற நற்றுணையாய்த் தோன்றால் நீயும்
வல்லனையேன் தனக்குவழித் துணையாய் வந்தாய்
வாழியிரு கண்மணியாய் வாழி வாழி!

சிவமென்னும் செம்பொருளே தமிழாய் வந்த
சிறப்பிதனைச் சிந்தனையிலே சேர்ப்பார் தம்முள்
நவசித்தன் பாரதிநம் தலைவன் ஆக
நானிங்கு நற்பொருளைப் பயின்று கொண்டேன்
உமிழ்கின்ற தென்மொழியில் உலவா உண்மை
உவந்து நிலைக் கின்றதிறம் நினதே மற்று
அமிழ்தென்று கூட்டுண்ணு கவிதைக் கள்ளின்
ஆனந்த லாகிரியை அமுதர் துய்ப்பார்

ஒப்பற்ற நாற்கவியும் ஒருங்கு பாடும்
ஒருபுலவன் தனக்குவமை தானே யாவான்

9

அப்துல் கபூர்ப் புலவனவன் அன்பின் மிக்கான்
அற்புதநற் சித்ரகவி அரிதின் யாத்தான்;
தப்பாத தமிழ்ப்பாடல் களித்து ராமச்
சந்திரனீ புலவர்தமைப் போற்றி யிங்கு
செப்பரிய புகழுடனே செல்வம் பெற்றுச்
செந்தமிழ்போல் சிறந்துநனி விளங்கு வாயே!

கலை வளரக் கவிபெருகக் கருணை யோங்கக்
காலமெலாம் நல்லறங்கள் களித்து நிற்க
குலமுயரக் கோலுயர உன்னை நாடும்
குடிபடைகள் குணமோங்கிக் குலவி வாழ
நிலைநின்று நீணிலத்து நெடுநாள் மொய்த்து
நீவாழ ஊர்வாழ உலகம் வாழும்
விலையில்லா மாணிக்க விளக்கே! நின்றன்
விளக்கொளியில் யாமிங்கு விளங்கு வோமே!

பாமாலை

கவிஞர் திருலோக சீதாராம்

(புலவர் பி.வி.அப்துல் கபூர் சாஹிப் அவர்கள்
திரு டி.என்.இராமச்சந்திரன் அவர்களைப் பாட்டுடைத்
தலைவராகக் கொண்டு இயற்றிய சித்திர கவிமாலை நூலை
திருவையாற்றில் 11.01.1970 அன்று வெளியிட்டபோது கவிஞர்
திருலோக சீதாராம் அவர்களால் பாடப்பெற்ற பாமாலை)

ஆன்ற புலவர் அருமைத் தமிழ்கூற
நான்ற புகழின் நலங்காணும் - தோன்றலினைச்
சத்தி யெனும் ராமச் சந்திரனை யாம்பாடச்
சத்தியவள் தாளே சரண். *(1)*

சங்கத் தமிழருமை சாற்றும் புலவரினால்
துங்கம் மகிழும் துரைமகனால் - இங்கிந்த
மாண்பு தெரிக்க மகிழுங் கவியரங்கம்
காணும் திருக்காட்சி யே! *(2)*

தமிழாடு நெஞ்சந் தழைந்தாடு நீர்மை
அமிழ்தாகி வந்த அருட்பா - குமிழியிடும்
ஆசுமுதல் நாற்கவிதை அப்துல்க பூர்ப்புலவன்
பேசுந் திறம்பேச வோ! *(3)*

ஆசு கவிப்புலவன் அப்துல்க பூர்சாகிப்
தேசு நிறைபாடற் றேன்றொடையில் - வீசுபுகழ்
சீராமச் சந்திரனே சித்ரகவி பெற்றான்
யாரே இவர்க்கிங் கிணை! *(4)*

வறியர்க் கிரங்கும் வளவனிவன் நட்புக்
கிறக்கம் தணியாக் கிறுக்கன் - மறவாத
நூலறிவன் நுண்மாண் நுழைபுலத்தான் சென்னி
வாலறிவன் தாள் வணங்கு வான். (5)

சொல்லும் பொருளும் சுவையுணர்வும் மற்றாங்கு
தொல்பிறவி ஞானத் தழும்புடனே - எல்லாமும்
ஒன்றாகும் இன்பத் துயர்வின் கொடுமுடியில்
அன்புவடி வானா னிவன். (6)

சீராமச் சந்திரர்க்குச் செய்யுந் திருக்காப்புப்
பேரா தரம்செய்யும் பெற்றியனைச் - சேராத
நாளிங்கு நானில்லா நாளாகும் என்றாக்கி
ஆளாகி எனையாண் டனன். (7)

யானன்றி வேறாகி யானும்தா னேயாகிக்
கோனாகி நின்றாளும் கொள்கையினான் - நானா
உலகில் நலியா துடனிருந்து காக்கும்
தலைப்பிள்ளை யானான் தலை. (8)

செம்பொருளே சிந்தாத செய்ய தமிழாகத்
தும்பியெனச் சூழும் துறைவனிவன் - இம்பரிலே
நற்கவிதை கொண்டு நயந்துமிகப் போற்றும்
விற்பன்னர் வேறிங் கெவர்? (9)

எங்கள் குமரன் இணையில் பெருந்தலைவன்
தங்கம் மதலையரும் தன்றுணையும் - எங்குநிறை
சுற்ற முடன் நட்பும் சூழ்க நலம்கண்டு
கற்றவரோ டுள்ளம் களித்து. (10)

சித்திரகவிமாலை

மாணிக்கமாலை பந்தம்

(நேரிசையாசிரியப்பா)

1. சீரார் ராமச் சந்திரன் கன்னன்
2. கொடைதரு மாமணி மன்மத தேகன்
3. மேதகு தனத னிதியுளான் மதிமலி
4. மறையோ னாங்கில மலகில கற்றோன்
5. நீதி யதிபதி தமிழிலே தென்னன்
6. பொன்மொழி பேசிப் புவிபுனை புகழ்பெறு
7. மன்பன் இன்னவன் மக்க ளிகசுக
8. மனைவி துணைவர் வணவள மேவச்
9. சீர்பேர் பார்மிசைச் சேர
10. வாழி வாழி வாழி மகிழ்ந்தே.

பொழிப்புரை

கீர்த்தி சேரப்பெற்ற ராமச்சந்திரன் என்னும் தலைவன் கொடையில் கர்ணன், கற்பகத்தரு. பெருமை பொருந்திய சிந்தாமணியைப் போன்றவன், உடம்பு அழகில் மன்மதன் போன்றவன். உயர்வான குபேரசம்பத்துள்ளவன். அறிவு நிறையப்பெற்ற அந்தணன். ஆங்கிலக் கல்வி கணக்கிலடங்காமல் அதிகங்கற்றவன். நீதியில் அதிபதியானவன். தமிழில், தமிழை வளர்த்த பாண்டியன் போன்றவன். பெரிய சபைகளிற்பேசி உலகோர் புனைந்துரைக்கும் புகழைப் பெற்றவன். அனைவரிடத்திலும் அன்புள்ளவன். ஆதலால், இன்னவன் தவ

மக்களும், உலகச் சுகபோகமுள்ள மனைவியும், தனது சகோதரர்களும், உலகில் பேரும் புகழும் சேரவும் அவர்களோடு நமது தலைவனும், நீடூழி மகிழ்ந்து வாழ்க,வாழ்க, வாழ்கவென்று வாழ்த்துகின்றேன். எல்லாம் வல்ல இறைவனருளால் எனது வாழ்த்தின்படி நீடு வாழ்வானாக.

அரும்பதவுரை

சீர் - கீர்த்தி
தரு - கற்பகம்
மணி - சிந்தாமணி
தனதன் - குபேரன்
மலி - நிறைந்த
அலகில - கணக்கில்லாமல்
தென்னன் - பாண்டியன்
புவிபுனை - உலகோர் புனைந்துரைக்கும்
வணவளம் - அழகிய பல செல்வமும்
பார்மிசை - உலகின் கண்ணே.

வினாவுத்தரம்

(வினா-கேள்வி-உத்தரம்-விடை) தலைவனிடம் பரிசுபெற்றுவந்த புலவனைப் பார்த்து ஒரு பாணன் இவ்வளவு பரிசு உனக்குக் கொடுத்தது யார் என்றுகேட்க புலவன் பாடலால் தலைவனுடைய ஊர்பேர் முதலியவற்றைக் கூறுவதாம். கீழேவரும் பாடலிற் காண்க.

பஃறொடை வெண்பா

மங்கலச் செல்வியார் மாட்டிலுயர் வாசமெது
நம்கை கொடுப்பதெவை நாவில் உயர்ந்தோர்யார்
தன்குடிப்பேர் சொல்வதெது தங்கத்தில் வைப்பதெது
தென்னிலங்கை வென்றோன்யார் செங்கதிர்ப்பின்
மன்னவன் யார்
என் தலைவன் ஊர்பேர் இயம்பென்ற பாணாநீ
இன்பாப் பொருளறிந்தே எங்கோவைக் கண்டவுடன்
பொன்பெறுவாய் இப்போதே போ.

பாடலின் உரை

மங்கலச் செல்வியார்	-	*திரு (லட்சுமி)*
மாட்டில் உயர்ந்தவாசம் எது	-	*நெய்*
நம்கை கொடுப்பது எது	-	*தானம்*
நாவில் (வருணம்) உயர்ந்தோர் யார்	-	*வேதியர்*
தன்குடியின் பேர்சொல்வது எது	-	*குலம்*
தங்கத்தில் வைப்பது எது	-	*ரத்தினம்*
தென்னிலங்கை வென்றோன் யார்	-	*ராமன்*
செங்கதிர் (சூரியன்) பின்மன்னவன் யார்-		*சந்திரன்*

மேலிருந்து உரையை கீழ்நோக்கி வாசித்தால்,

திருநெய்த்தானம் வேதியர்குல ரத்தினம்
ராமச்சந்திரன் - என்று வருவதறிக.

திரிபங்கி

திரிபங்கியென்பது ஒரு செய்யுளை மூன்று செய்யுளாகும்படி அமைப்பது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

காவலர் சபையில் ஆங்கிலம் பொழிமுகில் காமுற்றுப்
புவிசொல்
ஓவியத் தமிழில் ஓங்குரை தருபவன் ஓமத் தின்மறைதேர்
நாவலர் மொழியும் தீங்கனி எனமொழி ராமச் சந்திரனே
பாவலர் துணையே பாங்குயர் பசுமணி பாமெச் சிந்திரனே.

(இந்தப்பாடல் 3 பாடலாவதைக் காண்க)

மூன்றும் வஞ்சிவிருத்தம்

1. காவலர் சபையில்
ஓவியத் தமிழில்
நாவலர் மொழியும்
பாவலர் துணையே

2. ஆங்கிலம் பொழிமுகில்
ஓங்குரை தருபவன்
தீங்கனி எனமொழி
பாங்குயர் பசுமணி

3. காமுற்றுப் புவிசொல்
ஓமத்தின் மறைதேர்
ராமச்சந் திரனே
பாமெச்சிந் திரனே

பொழிப்புரை

அரச சபையில் ஆங்கிலம் மேகம்போலப் பொழிபவன், ஆசையுடன் உலகோர் புகழும் அழகிய தமிழிலும் உயர்ந்த சொற்பொழிவாற்றுவோன். வடமொழியில் நாவலர் போற்றும்படி, காருகப்பத்தியம், ஆகவனீயம், தட்சணாக்கினியாகிய ஓமகுண்டங்களை வளர்க்கும் வேத மொழிகற்றவன், கவிவாணர்களுக்குத் துணையாகிக்காப்பவன். பக்கத்தில் காமதேனு சிந்தாமணியுள்ள தேவேந்திரன் போன்றவன், பாடல்களின் சுவையறிந்து ரசிப்பவன் ராமச்சந்திர மறையோன் என்பதாம்.

பஞ்சபங்கி

பஞ்சபங்கியென்பது, ஒரு பாடலை இலக்கணமுறைப்படி, 5 பாடல் வரும்படி அமைப்பதாம்.

ஒருநேரிசையாசிரியப்பாவில் 1. கட்டளைக்கலித்துறை, 2. ஆவதுகுறள் வெண்பா, 3. ஆவது நேரிசைவெண்பா, 4. ஆவது வஞ்சிவிருத்தம், 5. ஆவது நேரிசையாசிரியப்பா வரும்படியமைத் திருப்பது கண்டு மகிழ்வீராக.

நேரிசையாசிரியப்பா

1. திருமறை வீட்டில் செபதவம் செய்யவும்
2. செந்தமிழை மருவுநற் சங்கத்தி லாங்கிலம்
3. மன்னவை மாண்புற வேகரு முகிலெனப்
4. பொழிவான் கவிஞரைக் கண்ட வுடன்தருங்
5. கொடைகண்ட உலகு தாதா வெனச்சாற்
6. றிடுமே ஆங்கிலம் செந்தமி ழாரியம்
7. பன்மொழி பாங்குறக் கற்றவ னாம்பார்
8. திருநெய்த் தானத்தில் திகழும் மறையோன்
9. திருநட ராசப்பேர்ச் செம்மல் அருந்தவத்
10. தால்பூமி வந்த மணிபூ சுரரும்
11. போற்றிடுங் கைகா மணிகாரா வாங்காண்
12. மஞ்சணை யும்நெய்த் தானம் தஞ்சை
13. தனிற்செல் வநகர் தஞ்சமென வந்
14. தவரை அஞ்ச லெனஆ தரிப்போன்
15. அன்னவன் நாமம் அறைகுதுங் கேண்மோ
16. என்ராமச் சந்திரன் என்சித் திரகவி
17. மாலையைப் பெற்றே மனையொன்றளித்தான்
18. காலையி லவனைநான் காணச் சென்றால்
19. வறுமைநீங் கப்பொன் வாரி வழங்குவான்
20. மறுமையிம் மைப்பயன் கருதா வள்ளல்
21. பாரி போலவே பாரில்
22. சீரொடு வாழ்கெனச் செப்பிவாழ்த் துவனே.

நேரிசையாசிரியப்பா 5 செய்யுளாவது காண்க.

1-ஆவது கட்டளைக் கலித்துறை

திருமறை வீட்டில் செபதவஞ் செய்யவுஞ் செந்தமிழை
மருவுநற் சங்கத்தி லாங்கிலம் மன்னவை மாண்புடனே
கருமுகி லென்னப் பொழிவான் கவிஞரைக் கண்டவுடன்
தருங்கொடை கண்ட வுலகுதா தாவெனச் சாற்றிடுமே.

2-ஆவது குறள் வெண்பா

ஆங்கிலஞ் செந்தமி ழாரியம் பன்மொழி
பாங்குறக் கற்றவனாம் பார்.

3-ஆவது நேரிசை வெண்பா

திருநெய்த்தா னத்தில் திகழும் மறையோன்
திருநட ராசப்பேர்ச் செம்மல் - அருந்தவத்தால்
பூமிதனில் வந்தமணி பூசுரரும் போற்றிடுங்கை
காமணி காராவாங் காண்.

4-ஆவது வஞ்சிவிருத்தம்

மஞ்சணையும் நெய்த்தானம்
தஞ்சைதனிற் செல்வநகர்
தஞ்சமென வந்தவரை
அஞ்சலென ஆதரிப்போன்.

5-ஆவது நேரிசையாசிரியப்பா

அன்னவன் நாமம் அறைகுதுங் கேண்மோ
என்ராமச் சந்திரன் என்சித் திரகவி
மாலையைப் பெற்றே மனையொன் றளித்தான்
காலையி லவனைநான் காணச் சென்றால்
வறுமைநீங் கப்பொன் வாரி வழங்குவோன்
மறுமையிம் மைப்பயன் கருதா வள்ளல்

பாரி போலவே பாரில்
சீரொடு வாழ்கெனச் செப்பிவாழ்த் துவனே.

அரும்பதவுரை : அடி-3

மண் அவை - அரசசபை
மாண்புற - மாட்சிமை பொருந்த
கா - கற்பகம்
மணி - சிந்தாமணி
கார் - மேகம்
ஆ - பசு (காமதேனு)
மஞ்சு அணை - மேகம் வந்து தங்குகின்ற மாடமாளிகையுள்ள
பாரி - கடையெழுவள்ளலில் ஒருவனான வேள்பாரி.

பிறிதுபடுபாட்டு

பிறிதுபடுபாட்டென்பது ஒருபாட்டை வேறுபாட்டாக இலக்கணப்படி அமைப்பதாம்.

நிலைமண்டிலவாசிரியப்பா

மங்கள வாழ்வுற வக்கீல் தொழிலால்
வளம லிந்தே பொங்கிட மக்கள்
மனைவி கிளையார் பொலிவு றப்பா
ரெங்குந் தனது புகழ்யாரும் பேசவே
ஈந்து வப்போன் சங்கத் தமிழறி
சற்குணன் என்ரா மச்சந் திரனே

இந்த நேரிசையாசிரியப்பா - கட்டளைக் கலித்துறையாக வருவது காண்க.

நேரசைக் கட்டளைக் கலித்துறை

மங்கள வாழ்வுற வக்கீல் தொழிலால் வளமலிந்தே
பொங்கிட மக்கள் மனைவி கிளையார் பொலிவுறப்பா
ரெங்குந் தனது புகழ்யாரும் பேசவே ஈந்துவப்போன்
சங்கத் தமிழறி சற்குணன் என்ராமச் சந்திரனே.

உரை - வெளிப்படையாகவுள்ளதறிக.

சிலேடை வெண்பா

சிலேடை என்பது ஒருபாடலில் இரண்டு பொருள் வரும்படியமைப்பதாம்.

நேரிசைவெண்பா

மஞ்சுபயத் தோடொதுங்க வான்தருவுங் கீழ்ப்படிய
அஞ்சிமணி யாவந் தடையுமே - மிஞ்சுபுகழ்
நல்லதிரு நெய்த்தானம் நானிலத்தோர் போற்றுதஞ்சைச்
செல்வநக ரம்மாளி கை.

இந்தப் பாடல் தலைவனுடைய கைக்கும் தலைவனுடைய மாளிகைக்கும் சிலேடை.

கைக்கு உரை

1-ஆவது உரை, மஞ்சு-மேகமானது. பயத்தோடு-அச்சத்தோடு. ஒதுங்க-தலைவன் கொடை தருங்கையைக்கண்டு கொடுப்பதில் நம்மையும் மீறிவிட்டது என்று ஒதுங்கி நிற்கவும். வான் - ஆகாயத்திலுள்ள, தருவும்-கற்பகமும், கீழ்ப்படிய - கையைக்கண்டு பணியவும், அஞ்சி - பயத்துடன், மணி-சிந்தாமணியும், ஆ - காமதேனுவும் பணிந்துவந்து, அடையும் - கையிலேயே தங்கிவிடும், (யாருடைய கையிலென்றால்) மிஞ்சு புகழ்-மிகுந்த கீர்த்தி பெற்றதும், நல்ல திருநெய்த்தானம்-நல்லதுமாகிய திருநெய்த்தானத்தையும், நன்னிலத்தோர்-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நாலு நிலங்களிலுமுள்ளவர்கள், போற்றும் தஞ்சை செல்வநகரம்-புகழக்கூடிய தஞ்சாவூரையும், ஆளிகை-ஆளக்கூடிய ராமச்சந்திர மறையோன் கை.

மாளிகைக்கு உரை

2-ஆவது உரை. தலைவன் மாளிகை மிகவும் உயரமானதால், மஞ்சு-மேகமானது. பயத்தோடு-தண்ணீருடன், ஒதுங்க-மாளிகையில்

வந்து ஒதுங்கிநிற்க, வான்தருவும் கீழ்ப்படிய-கற்பகத்தருவும் மாளிகைக்குக் கீழே தாழ்ந்துநிற்க, அஞ்சி மணி ஆ வந்து அடையுமே-மாளிகைக்குமேலே செல்லமுடியாமல் பயந்து மாளிகையில் தங்கிவிடும். மிஞ்சியபுகழ் பெற்ற திருநெய்த்தானம் - தஞ்சைச் செல்வம் நகரங்களிலுள்ள தலைவனுடைய மாளிகை அவ்வளவு உயரமுள்ளதாம்.

மும்மண்டல வெண்பா

மும்மண்டல வெண்பா என்பது, ஒரு வெண்பாவே, வளைந்து, சீர்தளை ஓசை குறையாமல் மூன்று வெண்பாக வருவதாம்.

மூன்றும் நேரிசைவெண்பா

1. சத்தியவான் தண்முகத்தான் செந்தமிழ்தேர் சத்தியென்பான்
சித்திபெற்ற திண்புயத்தான் சிந்திக்கும் - புத்திமிக்கான்
கண்ணியவான் கந்தமலி வித்தகனாம் கற்புடையான்
வண்ராமச் சந்திர மால்.

2. தண்முகத்தான் செந்தமிழ்தேர் சத்தியென்பான் சித்திபெற்ற
திண்புயத்தான் சிந்திக்கும் புத்திமிக்கான் - கண்ணியவான்
கந்தமலி வித்தகனாம் கற்புடையான் வண்ராமச்
சந்திரமால் சத்திய வான்.

3. செந்தமிழ்தேர் சத்தியென்பான் சித்திபெற்ற திண்புயத்தான்
சிந்திக்கும் புத்திமிக்கான் கண்ணியவான் - கந்தமலி
வித்தகனாம் கற்புடையான் வண்ராமச் சந்திரமால்
சத்தியவான் தண்முகத் தான்.

மேலே உள்ள ஒருவெண்பாவில், கீழே உள்ள 2 வெண்பாவும் மறைந்துள்ள தறிக.

உரை வெளிப்படையானது.

பதவுரை

தண்முகம் - அருள் நோக்குள்ள குளிர்ந்தமுகம்
சத்தியென்பான் - சத்தியென்ற செல்லப் பெயருள்ளவன்
திண்புயம் - வலிமைதங்கிய தோளுடையவன்
கந்தமலி - வாசனை மிகுந்த
வண் - திடமிகுந்த

மாத்திரைச் சுருக்கம்

மாத்திரைச் சுருக்கமென்பது, குற்றெழுத்துக்கு ஒருமாத்திரை, நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரை, ஒரு சொல்லுக்கு ஒரு பொருள்கூறி, அந்த வார்த்தையில் ஒருமாத்திரை குறைப்பது. எழுத்துச் சுருக்கமாம் மாத்திரை வருத்தனைக்கும் இதுபோல ஒரு மாத்திரை கூட்டிப் பொருளறியவேண்டும்.

அளவடி விருத்தம்

அளபொன்று நீக்கிய உயிரை வணங்குவோன்
அளபொன்று நீக்கிய வாய்மைக் குபேரனாம்
இளபொன்று நீக்கிய குவளைகட் கீபவன்
வளமலி ராமச் சந்திர வள்ளலே.

உரை

உயிர்-சீவன். இதில் ஒருமாத்திரை நீக்க. சிவன்-சிவனை
வணங்குவோன்
வாய்மை-நீதி. இதில் ஒருமாத்திரை நீக்க. நிதி-நிதியில்
குபேரன் போன்றவன்
குவளை-காவி. இதில் ஒருமாத்திரை நீக்க. கவி -
கவிஞர்களுக்குக் கொடுப்பவன்.

யாரென்றால் சகல வளமும் படைத்த ராமச்சந்திரன் என்பதாம்.

மாத்திரை வருத்தனை

அளவடி விருத்தம்

அளபொன் றேறிய செல்வத்தைச் சொல்பவன்
அளபொன் றேறிய விதந்தனைச் சூடுவோன்
அளபொன் றேறிய புரவிபோல் ஈபவன்
உளங்கனி வுளராமச் சந்திர வள்ளலே.

உரை

செல்வம்-நிதி. இதில் ஒருமாத்திரை கூட்டினால்.
நீத-நீதியேமொழிபவன்
விதம்-வகை. இதில் ஒருமாத்திரை கூட்டினால்.
வாகை-வெற்றிமாலை சூடுபவன்
புரவி-பரி. இதில் ஒருமாத்திரை கூட்ட. பாரி -
வேள்பாரிபோலக் கொடை கொடுப்பவன்
யாரென்றால் உள்ளத்தில் கனிவுள்ள ராமச்சந்திரன் என்பதாம்.

பல்லாண்டு வாழ்க

தஞ்சை சிவத்திரு க. சோமசுந்தரம் பிள்ளை

அணியலங்கல் பலகோடி முத்தமிழ்த் தாய்க்(கு)
அணிவித்தார் பல ரெனினும் அவள் உவக்கும்
அணிகளுள்ளே பாரதியின் தமிழ்ச் செம்பொன்னில்
அமைந்த அருட் பெரு வயிரக் கண்ணிமாலை
மணி முடியில் மகிழ்ந்தேற்கும் மாண்பு கண்டு
வளர் புவிக்கிவ் வொளி பரவ மனத்துட் கொண்டு
வணிக வியல் தேர்ந்த உயர் வழக்கறிஞன்
வண்டமிழோ(டு) ஆங்கிலத்திற் புலமை சான்றோன்

செஞ்சடையோன் அருள் கமழும் நெய்த்தானத்து
சீர்த்த நட ராசனுக்கு மகனாய் வந்து
கஞ்ச மலரோன் அறிவு கமழ நிற்கும்
கவிராமச் சந்திரனாம் நற்கலைஞன்
விஞ்சு புகழ் ஷெல்லியொடு மில்டன் கீட்சு
வேட்சு வொர்த்து செகப்பிரியர் முதலானோரின்
செஞ்சொ லுரைத் தேர்ந்த தனால் அவரின் மிக்குத்
திகழ்கின்ற பாரதியை ஆங்கிலத்தில்

பாரறியக் காட்டு முயர் குறிக்கோள் தாங்கி
பைந்தமிழ்ப் பாநயம் ஒளிர ஆங்கிலத்தின்
சீருயரக் குயிற் பாட்டை மொழி பெயர்த்த
தெய்வ அருட் செருக்காலே வியாசன் நாண

வீரவுரை பாரதியார் விதந்துரைத்த
வெற்றி விளை பாஞ்சாலி சபதத்தை வான்
ஆரமுதம் எனப் பருக ஆங்கிலத்தில்
அயன் நாண மொழி பெயர்த்தான் அடடா!என்னே!

பாரதி பாஞ்சாலியிசை அரங்கிற் பாட
பாங்காகிக் கின்னரியை வாசிக்கின்றான்
ஊரதிரத் துகிலுரியும் கொடுமை நாணி
உளங் கொதிக்க உரைத்த நெருப்புரையும் கண்ணன்
பேரருளில் திளைத் தொளிரும் துருபதன் மான்
பீடிசையும் நம்முணர்வைத் தீண்டுங் காலை
யாரிசை யிங்(கு) அதிக மெனற் கியலாமல் நம்
இதயத்திற் கின்னரி வாய் திறந்து பாடும்

ஏற்றத்தை என் சொல்வேன்! எழில் கொழிக்கும்
எண்ண மொடு மெய்ப்பாடு கடந்துணர்ச்சி
ஊற்ற மொடு நிற்பதை யான் உணருகின்றேன்
ஒப்பற்ற இறையருளாம் ஞானயோகப்
பேற்றினிலே பாஞ்சாலி திளைக்கும் பக்தி
பேச்சிறந்து நிற்பதனை பேசிக் காட்டும்
ஆற்றல் மிகு மொழி பெயர்ப்பை அளித்திலங்கும்
அற்புதப் பேரன்பன் பல்லாண்டு வாழ்க!

மெய்க்கீர்த்தி

இரா. சுப்பராயலு

(08.10.1994 அன்று தஞ்சை காமாட்சி திருமண மண்டபத்தில் வாசித்தளித்தது)

தஞ்சை பெற்ற தவப்பெரும் புதல்வர்
திரு ந.இராமச் சந்திர னாருக்(கு)
அகவை அறுபது நிறைவெய் துதலால்
உவகை பெற்றனர் ஊர்மக்க ளெல்லாம்!
மகிழ்வை யெய்தினர் மாண்புடை நல்லோர்! (5)
பெருமை பெற்றனர் பேரருள் தொண்டர்!
அன்னைத் தமிழும் ஆங்கில மொழியும்
இனிமை கொண்டே இறும்பூ தெய்திட
யானும் அன்னவர் சிறப்பினை யுரைப்பேன்.

எந்நாட்டவர்க்கும் இறையாய் அமைந்த (10)
தென்னா டுடைய சிவனார் உறையும்
திருநெய்த்தானம் ஊரைச் சேர்ந்த
நடரா சய்யர், காமாட்சி அம்மாள்
நற்பேற் றாலே நவக்கோள் நலத்துடன்
பவவெனும் யாண்டின் ஆவணித் திங்களில் (15)
அனுடம் மீனது விண்ணில் தோன்ற
அவனியில் உதித்தார் இராமச் சந்திரன்.

திருவை யாற்றில் பள்ளிக் கல்வியும்
திருச்சி நகரில் பட்டப் படிப்பும்

சென்னை மண்ணில் சட்டமும் பயின்று
கல்யாணி என்பார் கைத்தலம் பற்றி
இல்லறம் இனிதாய்ச் சிறப்புடன் நடத்தி
நெடுந்தொலை ஊர்திகள் தடத்தினுக் குரிமம்
பெருஞ் செல வுடனே பெற்றுஓர் நிறுவனம்
செழிப்புடன் நடத்திய பின்னரும், பயின்ற
சட்டக் கல்வியை விட்டக லாமல்
நீதி மன்றில் நிலைத்து நின்று
வழக்கை யுரைப்பதில் வாதம் செய்வதில்
நீதியை நாட்டலில் வல்லவ ரானார்.
தாய்த்தமி ழறிவும் ஆங்கில அறிவும்
நுணுகியும் பரந்தும் பெற்றவ ரிவரே
தமிழ்க்கவி சுவைத்துத் தணியா விருப்புடன்
ஆங்கில மொழியினில் அக்கவி பெயர்த்தே
உலகம் முழுவதும் உற்ற தமிழ்ப்புகழ்
பரவிடச் செய்யும் ஏந்தலு மானார்!
ஆங்கிலக் கவியினில் ஆழ்ந்த புலமை
யார்தான் பெறுவார் ஈண்டிவர்க் கிணையாய்?
தாய்மொழிக் கிணையாய் ஆங்கில மொழியினில்
தீஞ்சொல் தந்திடும் செஞ்சொல் நிகண்டிவர்
செந்தமிழ் மொழியின் இலக்கியந் தனக்கு
நேரிணை வழக்கை ஆங்கிலக் கவியினில்
மேற்கோள் காட்டியும் ஒப்பீடு செய்தும்
ஆய்வுத் திறனை நாட்டிடு வாரிவர்!

இளமை தொட்டே இவருடை நண்பர்
இவரினும் மூத்த அறிஞர்க ளாவார்!
பெருமை மிகுந்த சிந்தனை யாளர்
கேயார்சீனி வாச அய்யங்
காரைக் கேட்டால் இவர்திறன் இயம்புவார்!
பழகுதற் கினிய பாங்கி னாலே
நீ கந்த சாமிப் பிள்ளை யுடனே
நற்றிரு லோக சீதா ராமெனும்
சொற்பெருங் கடலுடன் தோழமை பூண்டார்!

கம்பனைச் சுவைத்தும் மில்டனில் தோய்ந்தும்
பாரதி யாரிடம் பாசங்கொண்டும்
சைவசித்தாந்தச் சமய இலக்கியம்
மூழ்கி எழுந்து முறைபடப் பயின்றும்
சேக்கி ழாரின் தமிழுக் கேயிவர்
சேயாய்த் திகழ்ந்தே அடிப்பொடி ஆனார்!

காரைக் காலின் அம்மைப் பாட்டும்,
பட்டினத் தடிகள் பரவுசீர்ப் பாட்டும்,
நற்றிரு லோக சீதா ராமின்
ஈடது இல்லாக் கந்தர்வ கானமும்,
தூய மறைத்திருக் கோவை யாரும்,
பாங்குடன் பாரதி நாட்டுக் களித்த
பாஞ்சாலி சபதமும் கண்ணன் பாட்டும்,
பேசும் தத்துவக் குயிலின் பாட்டும்
பாங்குடன் ஆங்கில மொழியினில் யாத்தார்!

ஆன்மீகத்தில் நாட்டங் கொண்டதும்
புன்மை வழக்கும் பொருந்தாத் தீர்ப்பும்
வேண்டே னெனவே விட்டொழித் திட்டார்!
பன்னாட் டறிஞரும் பாங்குறப் போற்றும்
சித்தாந் தக்கடல், சிந்தனைச்சீலர்;
வைணவத் தத்துவம் இவர்போல் விளக்க
யாருக் கியலும்? உரைக்கே உரையிவர்!
கிறித்துவம் இவர்போல் கிளத்து பவர்யார்?
சமயப் பொறைக்குச் சான்றிவர் கண்டீர்!
ஆதீனங்களின் ஆன்மிகச் செல்வர்!
தரும புரத்தில் தழைத்தினி திலங்கிச்
சைவசித்தாந்தந் தன்னை ஆயும்
பன்னாட் டவையின் இயக்குநர் ஏறு!
ஆங்கில நாட்டிலும் ஐரோப்பாவிலும்
அறிஞர் தொடர்பும் அன்பர் தொடர்பும்
கொண்டவர் இவரைக் குவலயம் போற்றும்!
அறிவினை விற்கும் வறிஞருக் கிடையில்

அறிந்ததைக் கொடையாய் வழங்கிடும் வள்ளல்!
கம்பன் காவியம் இராமன் கதையுடன்
பாரதம் என்றும், சித்தாந்த மென்றும்
திருத்தொண் டர்சீர்ப் புராண மென்றும்
மாமுநி மில்டன் மாகவி யென்றும்
எத்தனை வகுப்புகள் எடுக்கின்றார் இவர்!
கோட்டை யூரின் கருவூல மான
அமரர் ரோஜா முத்தை யாவின்
கெழுதகை நட்பின் கிளைஞ ராவார்!
இலக்கிய இலக்கண வேந்த ரான
கோபா லய்யரின் தோழமை பூண்டவர்!
தமிழின் பல்கலைக் கழகம் ஆண்ட
வ.அய்.சுப்பிர மணிய னாரும்
அன்பு பூண்ட அகத்திய லிங்கமும்
ஔவை நடராசன் எனும் அறிஞரும்
இவருடன் இயைந்த இன்னுயிர்த் தோழர்!
ஆய்வுப் பெட்டகம் இவருடை இல்லம்;
வற்றாக் கேணி; வளரும் நூலகம்!

அப்துல் கபூரெனும் சித்திரக் கவிஞர்
அன்புடன் இவர்மேல் ஆக்கிய சொற்கவி
சித்திரக் கவிதைக் கிலக்கணம் வகுக்கும்!
அத்திற மறிந்த பாட்டுடைத் தலைவர்
சித்திரக் கவிஞர் சிந்தை மகிழ்ந்திட
வறுமை நீங்கிடப் புலவருக் குறையுள்
வழங்கிய வள்ளல், அறிஞருள் புரவலர்!
எளிமையுங் கொடையும் இன்முக ஓம்பலும்
வருவோர்க் கெல்லாம் வாரிக் கொடுத்திட
அறிவும், ஆற்றலும் ஆழ்ந்த புலமையும்
பரிவுடன் பற்றும் பாங்குடன் பழக்கமும்
உடையவர் அதனால் ஊருடை நண்பரும்
ஆய்வறி ஞர்களும் ஆர்வலர் பலரும்
இனிமை நாடி இவரைச் சுற்றி

மலர் சூழ் வண்டாய் மயங்குங் காட்சி
நாளும் இவருடை இல்லின் மாட்சி!

நகைச்சுவை நாவலர்; நண்பருக் கெல்லாம்
புனைகதை இவர்போல் புகலுவோர் யாருளர்? (120)
செல்விருந் தோம்பி வருவிருந் தேற்கும்
வல்லமை யுடைய துணை நல முடையார்
மணியாய் மக்கள் நால்வரும் நான்கு
வேதம் போன்றே பேதமி லாதவர்
தந்தை சொல்லினை மந்திர மாக (125)
ஏற்றிடும் இளைஞர் போற்றலுக் குரியோர்!
விதையும் விளைவும் வேறாய் விடுமோ?

வாழிய வாழிய சேக்கிழார் அடிப்பொடி!
வாழிய வாழிய ஆண்டுகள் நூறு!
வாழிய வாழிய அவர்தம் புலமை!
வாழிய வாழிய வையம் மகிழ்ந்தே! (130)

வாழ்த்து

சந்தக்கவி நா.இராமசுவாமி

(09.10.94 அன்று வாசித்தளித்தது)

திருமலிந்த தஞ்சைநகர் திகழ்வதற்குத்
தோன்றியநல் சீர்த்திராம!
அருமறைகள் உபநிடத நூற்பொருள்கள்
ஐயமறத் தெளிய வைப்போய்,
கருவினிலே அத்வைதம் கண்டதனைக்
காசினிக்குத்தந்த சந்த்ர!
பருவரையின் பரம்பொருளும் பரவசிக்கப்
பாருலகில் நீடு வாழ்க. *(1)*

பொருளாசையுற்ற புவிமாந்தர் தம்முள்
பொருளாசை யற்ற பெரியோய்.
பொருளைத்து றந்து பொருளாவ தோர்ந்து
பொருள்கண்ட ப்ரும்ம ஞானீ.
பொருளான வேத உபதேசம், என்றும்
பொருள்மாறா தேத்திச் சொல்லிப்
பொருளற்ற நம்மைப் பொருளாக்கி வாழ்வுப்
பொருளாழம் காண வைத்தோய். *(2)*

குருபக்தி கொண்டு சிவசக்தி மந்த்ரம்
குறிக்கொண்டு ஸோஹம் ஜபமே
தரும்முக்தி என்று தெளிவாய றிந்த
தவமோங்கு ராமச் சந்த்ர!

கருமங்கள் யாவும் பயனைக்கொளாமல்
கருதிச்செய் ஞான குருவே!
அறுபத்து மூவர் ஒருமித்துத் தோன்றும்
அவதார மான பெரியோய். (3)

வெட்ட வெளியினிலே வீற்றிருக்கும் தீச்சுடரைக்
கட்டிப் பிடித்தவனே காலடக்கி - இட்டமுடன்
நன்றாய் நமக்கெடுத்து நல்லதமிழ் ஆங்கிலத்தில்
சொன்னவனே வாழ்கநிலைத்து. (4)

வாழ்த்துப்பா

இந்துசமயப் பேரவை

வெண்பா

சீர்பூத்த மாண்பு திகழ்இராமச் சந்திரனாம்
பேர்பூத்த ஞானப் பெருந்தகையே - பார்பூத்த
செல்வமனம் பொங்குசிவ சித்தாந்த கேசரியே
நல்விளக்காய் வாழ்க நயந்து.

விருத்தங்கள்

சிவஞானம் உலகெலாம் செழிக்க வைக்கும்
தி.ந.இராமச் சந்திரன்போர் சிறந்த செல்வா,
பவநோயால் வாடுகின்ற ஜீவ கோடி
பான்மைதரு மெய்கண்டு சுகத்தைக்காண
தவமான நெறிகாட்டும் சித்தாந்தத் தேன்
சாரறுபான் மூவருள்ளே முளைத்து நிற்கும்
நவமான ஆய்வியற்றி நமக்கு நல்கும்
ஞானகதிர்ப் பானுவே தமிழ்போல் வாழி

தமிழிலே வளங்காட்டும் சைவநூல்கள்
தரணியெலாம் பயிராகிக் கனிவழங்க
அமையுமொழி ஆங்கிலத்தில் மொழியெர்த்(து) ஆய்
வறிவுதரும் நலன்காட்டி, அன்பினாலே
இமயமுயர் பரமனடி இருதயத்தில்
எல்லாரும் காணலாம் என்னும் எங்கள்
சமயதத் துவங்களைப் பழம்பால் தேனாய்த்
தரும் ஞான சுரபியே சிவன்போல் வாழி

ஏழாலை மேற்கு, யாழ்ப்பாணம்
ஏழாலை. 09.10.2001

வாழ்த்துப்பா

த.ந. கணபதி

தொண்டர் புகழ்படி சேக்கிழா ரடிப்பொடி
வண்டமிழ் ஒலித்திட வாய்த்த தமிழ்த்துடி
சைவசித்தாந்தம் சிவமதத் தத்துவம்
கைவசமாகிட வாய்த்த பெருந்தவம்
சாசர் எனப்படும் ஆங்கிலப் பாட்டனும்
கூசிடும் வண்ணம் புலமை காட்டுவன்
இவன்,
ஆங்கில வழியிலும அருந்தமிழ் பரப்பும்
வீங்கிய தமிழன்; இவனது சிறப்பும்
உயர்ந்த புகழும் அங்கீகரித்து
அயராத் தமிழர் ஈழத்து யாழவர்
வழங்கிய முனைவர் பட்டம் பெற்றே
இலங்கிடும் இராமச் சந்திரன் வாழ்கவே!

என்று வாழ்த்தி மகிழ்ந்திடும்,
த.ந.கணபதி,
இயக்குநர்,
தமிழ் யோக சித்தர் ஆய்வுத் திட்டம்,
சென்னை.

12.01.2001

சேக்கிழார் அடிப்பொடி பிள்ளைத்தமிழ்

சந்தகவி நா. இராமசுவாமி

கடவுள் வாழ்த்து

பதினாறுசீர் ஆசிரிய விருத்தம்

உலகெ லாமெனுங் சொல்லச ரீரியாய்
ஒலித்து ஓங்கியே வான்வழி காட்டிட
உணர்வு மேம்படும் காதலி னோடுதம்
ஒளிரும் மாக்கதை யில்லதைச் சேர்த்தவர்

அலகில் சோதியன் இன்னருள் பெற்றவர்
அடியார் வாழ்க்கைய றிந்துய வைத்தவர்
அறிவு பூரண ஞானங்கொள் சேக்கிழார்
அடிகள் தம்மை "ஆத் மா"வெனக் கொண்டவர்

பலக லைவித்த கர்எனும் சேக்கிழார்
பரமெ னக்கொண்ட டிப்பொடி என்றுபேர்
பரிந்த மைத்தவர் மீதுபிள் ளைத்தமிழ்
பாட நாலுவா யானைக்கும் பிட்டபின்
நலங்கொள் நான்குவே தங்களும் ஏத்திடும்
நமச்சி வாயனை நங்கையி டத்தனை
நடன மாடுதில் லையம்ப லத்தனை
நமவெ னச்சொலி நான்கும்பிட் டுய்வனே.

(சேக்கிழாரின் உலகெலாம் என்ற 4 சீர்க் கலிவிருத்தத்தைப் பலமுறை இரட்டித்து 16 சீர் ஆசிரிய விருத்தமாக்கப் பட்டுள்ளது)

காப்புப் பருவம்

பதினான்குசீர் ஆசிரிய விருத்தம் (நாலடிமேல் வைப்பு)

தம்மைப் போற்றிடும் அடிய வர்க்கப
யந்த ருந்திரு மாலுடன்
சந்த தம்பல உலகு யிர்களோ
டனைத்தும் ஆக்கிடும் பிரமனும்

கந்தன் கரிமுகன் இந்தி ரன்முதல்
தேவர் யாவரும் கூடியே
கான கத்தினில் மோன நிட்டையில்
"கண்ட்" ப்ரும்மரி ஷீக்களும்

செம்மை "நீற்றொளி" பரவு தற்கவ
தரித்த சைவஆ சார்யரும்
சந்தா னாசிரி யர்க ளும்தெய்வச்
சேக்கி ழாருடன் குலமுனோர்

அம்மை அப்பனாய் முக்தி நல்கும
கேஸ்வ ரன்எனும் ஈசனும்
அரும றைப்பொருள் தருகு ழந்தையாம்
அடிப்பொ டியினைக் காக்கவே

அரிய நூல்தரும் சேக்கி ழாரடிப்
பொடியி னைத்தினம் காக்கவே
அமரர் சபைதனை அலங்க ரித்தடி
யார்அ டிப்பொடி காக்கவே.

(சேக்கிழாரின் "ஏரின் மல்கு வளத்தினால் வரும்" என்ற 7 சீர் ஆசிரிய விருத்தத்தை 14 சீர் ஆசிரிய விருத்தமாக்கப்பட்டது)

செங்கீரைப் பருவம்

பதினாறுசீர் ஆசிரிய விருத்தம்

அந்தமில் அந்தணரின் அஞ்செழுத் தோதிடுவார்
ஆலயம் சென்றுலவி ஆன்மநூல் சாத்திரங்கள்
ஆங்கில நல்லறிவால் அற்புதச் செந்தமிழால்
அங்கைநெல் லிக்கனிபோல் அன்பர்க்கள்
ளித்தருவார்.

எந்தைபி ரான்மகிழ எல்லாஞ்சி வார்ப்பணமாய்
என்றும்செய் உத்தமராம் எண்ணும்உண்
மைத்துறவி
என்னுள்நி றைந்தவராம் என்குரு சேக்கிழாரே
என்றவர் பாதப்பொடி என்பதில் திண்ணியராம்

சிந்தைக ளிப்புறவே செல்வம்பி றர்க்களித்தே
சேர்த்திடும் புண்ணியரே செங்கீரை ஆடுகவே
"திரேதாக்ரு தா"ச்சுகமே சேர்ந்திருந் தாலளிப்பீர்
சேக்கிழார் பாதப்பொடி செங்கீரை ஆடுகவே

மந்திரம் சொல்லவேண்டாம் மாண்புடை வாய்மைபேசில்
மங்கையி டத்தமைத்தான் சாயுச்சி யந்தருவான்
மன்னுமெய் யேசொலுவீர் ஆடுக செங்கீரை
மண்ணுல குய்யவந்தீர் செங்கீரை ஆடுகவே

(சுந்தரர் தேவாரத்தில் "அந்தியும் நண்பகலும்" என்ற கலிவிருத்தத்தை 16 சீர் ஆசிரிய விருத்தமாய்ப் பாடியது)

தாலப் பருவம்

பதினான்குசீர் ஆசிரியர் விருத்தம்

நாவுக் கரசென வாழும் பெரியவர் கோபா லையரும்
இவர்கேளிர்
நலமார் கரிச்சான் குஞ்சும் சீனிவா சய்யங்
காருமே இவர்கேளிர்
தேவர் சபைதனைத் தோற்று வித்தநல் திருலோ கமெனும்
சீதாராம்
தினமும் கும்பிடும் தெய்வப் பாரதி அறியச் செய்குரு
இவர்கேளிர்
பாவின் ஒலியினைப் பாடிக் காட்டிடும் சந்தக் கவிஎனக்
கிவர்கேளிர்
பரம்ப ரைச்செல்வ வளமே ஈவதால் ஏழை
எவர்க்குமே இவர்கேளிர்

காவில் சிறந்திடு தமிழ்நா டுலகிலும் கன்னித் தமிழுடன்
சைவமணம்
கமழத் தருபவர் சேக்கி ழாரடிப் பொடியீர்
தாலோ தாலேலோ
கர்ணன் தருபொருட் கொடையும் தாழ்ந்திடக்
கல்விக் கொடைதரும் பெருங்கர்ணா!
காசினி உள்ளநாள் பேசும் பெருமைகள் கண்ட அடிப்பொடி
தாலேலோ

கங்கைச் சடையனும் எங்கும் உளனெனக்
காட்டும் தகைமையீர் தாலேலோ
கயமை மதவெறி கூடா தெனஎணும்
சமயப் பொறையீர் தாலேலோ

(சேக்கிழாரின் "நாவுக்கரசரும்" என்னும் 7 சீர் ஆசிரிய விருத்தத்தை இரட்டித்து 14 சீர் ஆசிரிய விருத்தமாகப் பாடியது)

சப்பாணிப் பருவம்

பனிரண்டுசீர் ஆசிரியவிருத்தம் (நாலடிமேல் வைப்பு)

வாமபா கத்திலே தேவியை வைத்திடும்
வான்வெளித் தத்துவத்தை
வாழுநாள் என்றும்வ ழுத்தியே முக்தியைப்
பெற்றநல் தொண்டரான

ஏமவ ழீதரும் ஞானசம் பந்தரும்
சுந்தரர் அப்பரோடும்
இன்றமிழ் வாசகர் சேக்கிழார் மெய்கண்ட
தேவரும் காரையம்மை

மாமலைச் சிவஞான யோகியு மாபதி
மனவாச கங்கடந்தார்

மனிதராய் மீண்டவ தரித்துமோ டாடென
மகிழ்ந்துசப் பாணிகொட்டு

காமியம் எண்ணிடாக் கருமமே செய்திடும்
சேக்கிழார் பாததூளீ
கருநீல கண்டரை எப்போதும் எண்ணுவீர்
சப்பாணி கொட்டியருள்

கல்லாலன் தத்வமுப் பத்தாறும் கண்டநீர்
சப்பாணி கொட்டியருள்
கடுந்தவர் உற்றசீர் ஞானத்தால் பெற்றுளீர்
சப்பாணி கொட்டியருள்

(சேக்கிழாரின் "தேவர் தம் தலைவனார்" என்னும் அறுசீர் ஆசிரிய விருத்தத்தை இரட்டித்துப் பன்னிரண்டு சீர் ஆசிரிய விருத்தமாக்கிப் பாடியது)

முத்தப்பருவம்

பதினான்குசீர் ஆசிரியர் விருத்தம் (நாலடி மேல்வைப்பு)(கும்மி)

காவிரி என்னும்ஐ யாறுகள் ஓடிச்செ ழிப்புற்று
ஓங்குநெய்த் தானத்திலே
கற்புடைக் காமாட்சி அம்மாளுக் கும்நட
ராசர்க்கும் தோன்றுஇ ரத்தினத்துள்

சேவிடை ஏறுசி வன்திருப் பாதம்அ றாமன
நல்முத்த டிப்பொடியீர்
செல்வச்செ ழிப்பிலும் சிந்தைய டக்கியே
செல்கதி எண்ணுவீர் முத்தருள்க

பாவில்பு கழ்ந்தசை வாகம நூலெலாம்
பாங்குடன் ஓதிய வாய்மணக்கப்
பதிபசு பாசமுப் பண்புசை வத்தரும்
பாலொளி நீற்றுமுத் தந்தருக

கோவில்சி தம்பரம் கொள்கைசி வன்கழல்
கும்பிடும் நற்செயல் ஒன்றெனவே
கொண்டுநல் அஞ்செழுத் தென்றும்மு ழக்கியே
கூவிடும் சைவவாய் முத்தருள்க

குலமோங்கிடப் பலநூறுநல் அருநூல்களைத் தமிழாங்கில
மொழிமுத்தெனத் தந்தவாய் முத்தருள்க.

(சுந்தரர் தேவாரத்தின் "தேனெய்பு ரிந்துழல்" என்னும் 7 சீர் ஆசிரிய விருத்தத்தை இரட்டித்து 14 சீர் ஆசிரிய விருத்தமாகப் பாடியது)

வருகைப் பருவம்

பதினான்குசீர் ஆசிரியர் விருத்தம் (நாலடி மேல்வைப்பு)

முக்கனிச் சாறுபோலத்தமிழ் சைவம்
ஈயும்முது முனைவர் வந்தருளுக
முந்தையர் தெய்வ நூலோதலே பிரம
வேள்வியெனும் அந்த ணாளர்வருக

அக்கார அடிசில் போலச்சிவ மறைகள்
அள்ளித்தரும் அடிப்பொ டீவருகவே
ஆத்மனில் பேதா பேதமான சிவனைத்
த்யானிக்கச் சிவோஹம் பாவம்செய்தே

அக்கரம் ஐந்தை அறியும்பர வித்தை
ஒன்றெனவே அறிந்த சிவம்வருகவே
அதுவலால் மற்ற வித்தையெலாம் அபர
வித்தையெனும் அறிஞ வருகவருக

(இ)ருக்கெனும் வேத நடுவணுள்ள வேதன்
சிவனேயெனும் ஞான போதன்வருக
துக்கமும் நீங்க மும்மலமும் நீக்கி
வாழ்ந்துகாட்டும் துரிய ஞானிவருக

மக்களின் பக்கம் நின்றுதினம் சுத்த
அத்துவிதம் வழங்கு வாய்வருகவே
பக்குவ நிலைய டைந்துபர மோனம்
பார்த்தஅடிப் பொடியி ரேவருகவே

(ஞானசம்பந்தர் தேவாரத்தில் "வேயுறுதோளி பங்கன்" என்னும் 7 சீர் ஆசிரிய விருத்தத்தை இரட்டித்து 14 சீர் ஆசிரிய விருத்தமாக்கிப் பாடியது)

அம்புலிப் பருவம்

இருபத்தெட்டுச்சீர் ஆசிரிய விருத்தம் (நாலடிமேல் வைப்பு)

சாம வேத கீதனான சங்க ரன்தாள் போற்றியே
சத்யவாழ்வு வாழ்ந்த தொண்டர் சரிதம் தந்த சேக்கிழார்
சரிச மான பாத மேதம் பற்றெ னக்கொள் அடிப்பொடி
சகல லோக மாந்த ருய்யச் சைவம் காக்கும் தொண்டராம்

சேம மாக வாழ எண்ணில் இவரோ டாடு தண்மதீ
செகத்து ஓங்கு புலவர் நாவில் சீர்பெற் றுய்வாய் தண்மதீ
தேம லோடு தேய்ந்த முகத்தை நீற்றி னால்து லக்குவார்
தெய்வ நீற்றொ ளிக்கு முன்னர் நிழல்ஒ ளீயும்
நிற்குமோ?

சோமன் என்ற பேரும் பெற்ற சந்த்ர னேநீ இவரொடும்
சோர்வி லாது துள்ள லோடு ஓடி ஆடு தண்மதீ
சேர மானும் சைவச் சேனைச் சுந்த ரர்வ ரும்முனே
சேர்ந்துஆடு சிவனும் காவான் சேரி டந்தான் உனக்கெது?

காம னைத்தம் கண்ணி னாலே காய்ந்த ழித்த கடவுளின்
கற்றை வேணி உற்ற மர்ந்து கதியி லாதி ருந்தனை
கால னைத்தம் காலி னாலு தைத்த ஈசன் இவர்உளம்
கண்ட மர்ந்து குடியி ருக்க யோக நிட்டை புரிபவர்

தாம றிந்த டிப்பொ டியின் தயவு பெற்று வாழ்வையேல்
தேய்பி றைய கன்று ஓடும் அம்பு லீநீ ஆடவா.

(சேக்கிழாரின் "தாளில் வாழ்செருப்பர்" என்னும் 7 சீர் ஆசிரிய விருத்தத்தை 28 சீர் ஆசிரிய விருத்தமாக்கிப் பாடியது)

சிற்றில் பருவம்

பன்னிரண்டுசீர் ஆசிரிய விருத்தம் (நாலடி மேல் வைப்பு)

வண்டு முரலும் சோலைமிகு
வளமார் தஞ்சைத் தரணியிலே
வாழ்க்கை செழிக்கப் பார்வதிபோல்
மயிலாம் மனைவி கல்யாணி

கண்டு மகிழக் குழந்தைகளும்
காதல் அருமைப் பெயரருடன்
கவினார் அழகுப் பெயர்த்தியரும்
களித்துச் சிறந்தே குலந்தழைக்க

குன்றத் தூர்சேக் கிழாரவர்சீர்
குலவும் அடியின் பொடியானீர்
கூடிக் கட்டும் எமதுமணல்
குன்றுச் சிற்றில் சிதையேலே

விண்ணோர் போற்றும் ஈசன்பால்
விருப்பம் கொண்டீர் நூற்றாண்டின்
மிகவே வாழ்ந்து பேரின்ப
வீடே பெறுவீர் கண்கூடு

சின்னஞ் சிறிய மணல்வீட்டைச்
சிறியேம் பெற்றோம் சிதையேலே
செந்நாப் புலவர் அப்துல்கபூர்
செழித்தே வாழ வீடளித்தீர்

தெளிந்த தரும வழக்கறிஞ
தெளியார் சிற்றில் சிதையேலே,
தீங்கே நினையா மனமுடையீர்
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(சேக்கிழாரின் "விரைசெய் நறும்பூ" என்னும் 6 சீர் ஆசிரிய விருத்தத்தை இரட்டித்து 12 சீர் ஆசிரிய விருத்தமாக்கிப் பாடியது)

சிறுபறைப்பருவம்

பதினாறுசீர் ஆசிரிய விருத்தம் (நாலடிமேல் வைப்பு)

என்பொடுகொம் பாமைதமை யணிந்தசிவ ஈசன்
எம்முளம்நி றைந்தபொருள் என்றஅடி யார்கள்
இன்னுயிரும் எப்பொருளும் ஈந்துவழி நின்றார்
யாவரையும் ஒத்துமவர் அடிப்பொடியும் ஆனீர்

அன்னமிளை யான்குடியார் அளித்ததிறம் போல
அன்னந்தரும் அடிப்பொடியே முழக்குசிறு பறையே
ஆனாயர் போலத்தமிழ்ச் சைவக்குழல் ஓலியால்
அகிலமதத் தார்சேர்த்தீர் அடிப்பொடிமு ழக்கு

தன்னைச்சந் தனமாக்கி அரைத்தமும்மை மூர்த்தி
தனையொத்துப் பொருள்விற்றும் நூல்பலவும் தந்தீர்
தன்னரிய மனவாக்குத் தொண்டர்பசு பதிபோல்
சாத்திரமந் திரந்தருவீர் சிறுபறைமு ழக்கு.

நன்மைபுரிந் தனைவரையும் சிவத்தொண்டில் நடத்தும்
நல்லகண நாதரைப்போல் ஆனஅடிப் பொடியீர்
நாளுந்தமிழ்ப் புலமையினால் கோவைதரு காரி
நாயனார்போல் திருக்கோவை நயந்தளித்தீர் முழக்கு

சென்னிமதி சூடுசிவன் அடியவர்கள் போன்றும்
சேக்கிழாரும் ஆனவர்நீர் சிறுபறைமு ழக்கே
தென்தில்லை யம்பலத்தான் திருவடியே வழுத்தும்
சேக்கிழாரின் அடிப்பொடியீர் சிறைபறைமு ழக்கே.

(சேக்கிழாரின் "ஆலுமறை சூழ்கயிலை" என்னும் கலிவிருத்தத்தை 16 சீர் ஆசிரிய விருத்தமாக்கிப் பாடியது)

சிறுதேர்ப் பருவம்

ஒன்பதுசீர் ஆசிரிய விருத்தம்

பள்ளம்பாய் வெள்ளம்போல் பரிவுகொள்தொண் டர்மனம்
பாரா ஞானா காசத்தின் பரசிவன்வதி யுமிடம்
தெள்ளத்தெ ளிந்திடுசேக் கிழார்மனத்தும் நின்றவன்
தேனாய்ப் பாலாய்ச் சாறான திருத்தொண்டர்புரா
ணமதால்

ஒள்ளியதொண் டர்கதையே உயிரெனக்கொள் ளடிப்பொடி
ஓங்கா ரத்தான் நேசத்தான் உருட்டுகசிறு தேரே
உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் அடிப்பொடியீர் ஒல்லென
ஓடா ஆடாத் தேர்நீரே உருட்டிடுகஉ லகெலாம்

(திருஞானசம்பந்தரின் "பந்தத்தால் வந்தப்பால்" என்று தொடங்கும் திருத்தாளச்சதி 9 சீர் ஆசிரிய விருத்தத்தைப் பின்பற்றிப் பாடியது)

கொடுமுடி

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

சேக்கிழாரடிப்பொடி
செந்தமிழ்வாணர் தி.ந.இராமச்சந்திரன் -
இவருக்குத்
தொழுது படிக்கவும் புத்தகம்தான்
பொழுது முடிக்கவும் புத்தகம்தான்.

எழுத்துக் கன்னங்களில்
இவர்
இட்ட முத்தங்கள்
எந்த எண்ணிலும் அடங்கா!

வேடந்தாங்கலாய்த் - தமது
வீட்டை மாற்றினார்
ஆய்வுப் பறவைகள் அன்றாடம்
பறந்து வருகின்றன!

இவர் வீட்டுச்
சுண்ணாம்பைச் சுரண்டினாலும்
இலக்கியமாய் இலக்கணமாய்
உதிரும் என்கின்றனர்!

தமிழ்
இவருக்குத் தாய்மடி!
ஆங்கிலம் எடுபிடி!
மொழிபெயர்ப்புக் கலையிலோ
இவர் கொடுமுடி!

(2007)

திருநெய்த்தானம் இராமச்சந்திரனார் நான்மணிமாலை

முனைவர் சாமி.செல்வவிநாயகன்

காப்பு

உயர்இராமச் சந்திரன் ஓங்குபுகழ் நூற்கே
இயல்புடன் கணபதி காப்பு

வெண்பா

உலகெலாம் ஏத்தும் உயர்குடிப் பிறந்த
இலகுமிரா மச்சந் திரன்சீர் - பலபல
நாடெல்லாம் தாண்டி நலனுறுமால் அன்னவன்சீர்
பாடுவோம் நாமும் பணிந்து 01

கலித்துறை

பணிந்திடுவான் ஈசன் பாதம் அதனைப் பழித்திடாமல்
அணிந்திடுவான் நன்மணி அன்னவன் நெஞ்சில் திருமறைகள்
இணைந்திடுமாம் என்றும் திருநீறு பூசிய இயல்பினாலே
மணம்கமழ் மேனி மிளிர்ந்திட வாழ்குவன் மன்பதையே!
02

விருத்தம்

மன்பதையில் தனக்கீடாய் யாரு மின்றி
மலிபுகழ் கொள் இராமச்சந் திரனைப் பாரீர்
கன்னல்தமிழ் கற்றதொரு திருவா யாலே
கைலைமலை உறைகின்ற சிவனைத் தொழுவான்
பொன்மேனித் தாயாராம் மலைமகள் சீரை
பெருமகன்தான் நெஞ்சுள்ளி போற்றல் செய்வான்
மன்னவனின் பெருவாழ்வு மலைமேல் தோன்றி
மக்களிடை ஒளிபரப்பும் மகிழ்ச்சிக் கொள்ளும்!

03

அகவல்

கொள்ளும் புலமைப் பெருக்கத் தாலே
எள்ளள வேனும் இறுமாப் பின்றி
எல்லா ரிடமும் இனிது பழகி
நல்லவை செய்யும் நற்றமிழ் நம்பி
ஆங்கில மொழியில் அளவில் வன்மை
ஓங்கிய செல்வன் ஓப்பறு கேள்வி
தேங்கிடப் பெற்ற திகழ்கடல் அன்னான்
ஒவ்வொரு புலவரும் உரைக்கும் செய்தி
செவ்வுற வாங்கி சேர்த்த தேனீ
தான்உறு திறத்தால் தண்மலர்க் கொத்து
பிறர்க்கெடுத் துரைக்கும் பெருமை பூண்டான்
அரிய செய்திகள் அளவில தம்மை
அரிதின் பிறர்க்கே அன்புற உரைக்கும்
முற்றிய புலமையின் மேதகு ஆசான்
உலகியல் தெரிந்தோன் உறுவன அறிந்தோன்
இலகெழில் செறிந்த இலக்கியம் தம்மை
வண்ணக் கன்போல் வரையறை செய்வோன்!
மொழிநடை உள்ளுறை மிக்கிடு உத்திகள்
செழித்திடு நூலைச் சேர்த்திடு வித்தகன்
தமிழ்நா டடைந்த தவத்திரு மகன்தான்

விழுமிய கருவூலம் போன்றான்
அன்னவன் வாழ்கபல் ஆயிரம் ஆண்டே! 04

வெண்பா

ஆண்டுகள்பல் லாயிரம் தாம் அவர்புகழ்
தூண்டா மணிவிளக் காய்த்துலங்கும் - ஈண்டிய
செல்வம் தழைக்கச்சீ ரோனும் தழைத்திடுவான்
மல்கும் வளன்கள் மிகுத்து 05

கலித்துறை

மிகுபுகழ் கொண்டிடு மேதை இராமச் சந்திரன்தான்
தகவடை சீர்த்திகள் தாமுற நின்று தரணியிலே
வகையுற வாழ்வான் வளமெலாம் பெற்று வளர்நலத்தால்
தொகுசீர் நிரம்பத் திருவுடை யானாய்த் திகழ்ந்திடவே. 06

விருத்தம்

இடமெலாம் கொள்ளா இகவாச் சிறப்பை
எழிலுறக் கொண்டவ! எங்கள் தலைவா!
கடமையாய்க் கல்வியை கருதிய மனித!
கற்றன கைமண் ணளவோ! கடலதே!
நடைபயில் தமிழின் நன்னூல் பலப்பல
நயமுடன் ஆங்கிலம் ஆக்கினாய் வாழி!
விடைவரு சிவனார் வான்புகழ் தன்னை
விரிகடல் ஞாலம் அறிந்திட வைத்தாய்! 07

அகவல்

வைத்தாய் தமிழை நெஞ்சில் என்றும்
நெய்த்தா னத்துதி நேரிய அண்ணல்!
பொய்த்தான் போற்று நூல்களைக் கலவாய்!
எய்த்தான் வைப்பாய் இலங்கிடு தோழ!
செந்தமிழ்த் திறத்தை செம்மையாக் கொண்ட

அந்தண் புலவ! அரிய பண்பினாய்!
வேறு மொழிகளில் வெறுப்பும் இல்லை!
தேறிய மொழியாம் செந்தமிழ் தன்னை
மகாதேவ மொழியென முழக்கிய மாண்பினை!
சிவனும் தமிழும் தன்னிரு கண்களாம்
வாழ்ந்து காட்டும் வள்ளல் நீயே!
ஒருவாழ் வதனை ஒருகருமத் திற்கே
அருமைப் பெரியோர் ஆக்குவர் உலகில்
திருமுறை ஓதவும் சிந்தாந்தம் தெளியவும்
திருமுறை சாத்திரம் பண்டாரங்கள்
நெறியுடன் கற்று நேருற உணர்ந்து
வருந்தலை முறையினர் வாகுடன் கற்க
ஆற்றிய பணிகள் யார்கொல் ஆற்றுவர்?
அத்துவைதி ஆக அகத்தினில் பிறந்து
சிவாத்துவைதி ஆன சீரோய் வாழி!
வேதம் ஆகமம் வேறுபா டின்றி
ஓதுநூல்கள் சிவனெனக் கண்டாய்!
இத்துறை தன்னில் எஞ்சிய பணிதான்
மிகவும் பெரிதாம் மிக்கவ! அதனால்
இத்தமிழ் நாடதனில் நீவிர்
வித்தக ராக வாழ்ந்திட ஊழியே! 08

வெண்பா

ஊழிதோ றூழி உயரியோன் வாழ்ந்திடுக!
ஆழி யோன் அருளால் அனைத்துமே - சூழிட
சித்தாந்தம் பேசி சிறப்பெல்லாம் தான்பெற்று
நிதியமாய் நன்றாய் நிலைத்து. 09

கலித்துறை

நிலைத்திடும் வாழ்வு நெடுந்தமிழ்த் தொண்டினில்
நீண்டிடுமால்
கலைமகள் வந்து பணிசெய நின்று கவின்பெறவே

உலகில் தமிழை எடுத்துரைத் தோதி உயர்பணியை
விலையறச் செய்து விரிவளன் பெற்று விளங்கையரே! 10

விருத்தம்

ஐயர்தாம் செந்தமிழ்க்கே அளித்ததொரு நன்கொடையை
ஐயநீ அளித்தாய்!
மெய்யுடைய சித்தாந்த நூல்களிலே மேலவர்தாம் சிந்தை
கொள்ள
வெய்யவினை அனுமதியைத் தரவில்லை போலும்காண்!
மேலோர் செய்யா
செய்யதமிழ்ப் பணியினையே சீராள நீசெய்தாய்! செகத்தை
வென்றாய்! 11

அகவல்

வென்றிடு நூல்கள் வென்றிடு அடியார்
நின்றன் துணையாம் நேரியாய்! நல்லாய்!
பெரிய புராணப் பெருங்கடல் தன்னில்
அரிய முயற்சியால் ஆழ்ந்து மூழ்கினை!
அந்நூல் அதனின் அரும்பொருள் கண்டு
சிந்தை மறந்தனை! செற்றனை வினைகளை!
சேக்கிழார் தம்மை குருவெனக் கொண்டும்
மாக்கதை தன்னை வேதம் என்றும்
தன்வாழ் வதனில் தானுறக் கொண்டு
சேக்கிழார் அடிப்பொடி திருப்பெயர் பெற்றாய்!
ஆங்கில மொழியில் அந்நூல் அதனை
தீங்கிலா வண்ணம் பெயர்ந்தெடுத் தாக்கினை!
வயலிலாத் தண்ணீர் வழங்கும் உழவன்
வியன்செயல் போன்ற தாகும்! வித்தக!
மயலில் புலவ! மாண்பு மிக்க
அயலார் போற்றும் அருந்தமிழ்ச் சீரோய்
சிவனே தெய்வம் சிவனே சமயம்
சிவனே வாழ்வு சிவனே மூச்சு

சிவனே எல்லாம் என்று கொள்வாய்
சிவனடி பற்றி சீரெலாம் பெற்று
நவநலச் சிறப்பு நண்ணிடப் பெற்று
தவமதி வாழ்வு தண்ணுற அடைந்து
வாழ்க! வாழ்க! வையத் தென்றுமே! 12

வெண்பா

என்றும் விளங்கும் எழிலார் தமிழ்மொழியில்
குன்றாத அன்புடைமை கொண்டாயே - வென்றிடும்
வன்மை நிறைந்த வான்புலமை பெற்றதனால்
என்றும் விளங்கும் புகழ். 13

கலித்துறை

புகழுறு மாணிக்க வாசகனார் தந்திடு நூல்களையே
திகழுற ஆங்கிலம் தன்னில் மொழிபெயர்த் திட்டனையே!
அகழ்கடல் ஞாலம் அதிசயித் தேத்தும் அறிவுடையார்
தகவுறப் பேசி தனிமகிழ் வுற்றார் திருவுறவே! 14

விருத்தம்

திருவுறு கவிதை யாலே
திகழ்ந்திடு பாரதி யாரின்
உருவுறு கவிதை தம்மை
உலகமே அறிய வேண்டி
பொருள்செறி வகையில் நின்று
பெயர்த்தனை ஆங்கி லத்தில்
அருஞ்செயல் என்றும் என்றும்
அருந்தமிழ் வரலா றாகும்!! 15

அகவல்

ஆகுஞ் செயல்கள் அன்னைத் தமிழின்
வேக வளர்ச்சியின் விழைவைக் குறித்தன!

இலக்கிய உலகில் ஈடிலாப் பயிற்சி
துலக்குறக் கொண்ட தேனீ ஆனாய்!
தேனினைச் சேர்த்து தெள்ளுற வழங்கும்
மேனிலைக் கொள்ளும் மதுகரம் போல
எத்தனை செய்திகள் எத்தனை வரிகள்
எத்தனை உவமை எத்தனை அழகே
அத்தனை தனையும் அயரா துழைத்து
தொகுத்து வழங்கிடும் தூயவ நீயே
மலையிடைப் பிறந்து மணங்கொளத் தவழ்ந்தே
அலைபோல் வீசும் அருந்தமிழ்த் தென்றல்நீ!
கடலினில் இறங்கி கடுந்துயர் கொண்டு
மிடைந்திடு முத்தினைத் தருவோய் நீயே!
கான்வளர் சந்தம் கமழ்மணம் தருதல்
போன்ற சந்தப் புலவன் நீயே
நற்றமிழ் போற்றும் நற்றிறத் தாலே
நல்லவை அனைத்தடை யாளம் நீயே!
மன்னிய புலமை மாதவ!
மன்னிடு வாணாள் நீடுக நினக்கே! 16

வெண்பா

நினக்கென்று நூலகம் நேருற ஆக்கி
வனப்புற நூல்கள் வகையால் - வனைத்து
நீடுபுகழ் கொண்டாய்! நினதகம் எல்லார்க்கும்
ஏடுதரும் வீடாய் இலங்கும். 17

கலித்துறை

இலங்கிடு நூல்கள் பயின்ற புலமை இருவளத்தால்
துலங்கிடும் ஆய்வு நிகழ்த்திடு தூயோர் நலம்பெறவே
விலங்கிடா தன்னார் வியன்பயன் பெற்றிட வேண்டியவை
கலங்கிடா தீந்து திருநெறி காட்டியே காத்திடுவை! 18

விருத்தம்

வையத்துத் துறையும் புலவீர்கள்!
வள்ளல் இராமச் சந்திரனார்
செய்யும் தொண்டும் திருப்பணியும்
தெருள நீவீர் அறியீரோ
செய்ய மனத்தார் அவராவர்
சிறிதும் பகைமை பிறர்க்கறியார்
எய்தார் அழுக்கா றென்றும் காண்!
இவர்தம் சால்பை உலகறியும்! 19

அகவல்

உலகில் உயர்ந்த ஒருபெருங் கழகமாய்
இலகிய பல்கலை ஏற்றம் பெறுமே
யாழ்பல் கலைக்கழ கந்தான் ஈடிணை
அற்ற ஒன்றென ஆன்றோர் ஏத்துவர்
தகவிலார் தமக்குத் தன்சிறப் பதனை
வழங்குவ தில்லா வன்பெரு கழகம்
அப்பல் கலைக்கழ கந்தான்
நின்றனை அழைத்து நிகரிலா வகையில்
அறிஞர் என்றும் ஆசான் என்றும்
செறிந்த பொருள்கொள் செவ்விய பட்டம்
தன்னைத் தந்து தனிச்சிறப் பெய்தும்!
ஆங்கில அறிஞர் அகராதி அரசர்
சான்சன் என்னும் தகைமிகு புலவர்
பட்டப் படிப்பை பல்கலைக் கழகமாம்
ஆக்சு போர்டாம் அதனில் தொடங்கினார்
பற்றாக் குறையால் பாதியில் விட்டார்
பல்லாண்டு கழித்துப் பல்கலைக் கழகம்
இலக்கிய அறிஞர் மதிப்பியல் பட்டம்
அவர்க்கே தந்தே அரும்புகழ் அடைந்தது
இலக்கிய வரலாற் றாசிரியர் இதனை
ஈதோர் தற்செயல் அன்றெனக் குறிப்பர்

அதேபோல் நின்றன் அறிஞர் பட்டமும்
தற்செயல் அன்றாம்! தவமுயல் வதனால்
தமிழ்த்தாய் தந்த தண்ணீய பேறாம்!
ஈடில் பெருமைப் புலவ!
நீடு வாழ்க! நிலமுள வரைக்குமே! 20

வெண்பா

மேலே நிலவும் ஒளிவானே ஒன்றுரையாய்!
சாலச் சிறந்த தமிழ்ப்புலவன் - சீலன்
இராமச் சந்திரன்போல் கண்டனையோ நீயும்
தராதலத் தென்றேனும் தான். 21

கலித்துறை

தானே தனக்கொப் பெனுமோர் தனிநிலை
கொண்டவனாம்
வானோர் துதிக்கும் வளமார் தமிழின் விரிபுலவன்
தானோர் இராமச் சந்திரன் தகவால் தமிழ்மொழிதான்
தேனாய் இனித்துத் திருநிலம் எங்கும் திகழ்ந்திடுமே! 22

விருத்தம்

திகழ்ந்திடு புலமை மிக்க திறமார்ந்த செவ்வி தனதாக விளங்க
நின்றே
அகழ்ந்திடு நூலின் பொருளை அனைவோரும் கற்றே
அரும்பேற டைதல் வேண்டி
புகழ்ந்திடு வகையில் எழுதி புலனெல்லாம் தெளிந்து
பயில்கின்ற நெறியைக் காட்டி
மகிழ்கின்ற செல்வ நின்றன் மாண்பான செய்கை
மதிப்பில்லாப் பெருமைத் தாமே!
23

அகவல்

தாமே பிறர்க்கென வாழும் பண்பு
காமுறு அன்பு கவினிய நெஞ்சம்
தூமென் சொற்கள் சோர்விலா வன்மை
மேவிய வாழ்வு மேற்றிசைக் கல்வி
கீழ்த்திசை உழைப்பு கலந்திடு பாங்கு
வித்தகக் கல்வியின் மேவிய அடிப்படை
ஆய்வன் என்றே அருமுர சறையும்!
தோய்கலை ஆய்வில் துவளுதல் இன்றி
இடைவெளி இல்லா ஈர்ப்பி னாலே
ஆண்டுகள் பற்பலஅ வன்போக் கினனே!
உயர்அறிவு ஓங்க உளங்கொண் டனனே!
மன்பதை வாழ மனஞ்செலுத் தினனே!
பொதுமை நோக்கில் புதியதோர் உலகை
அன்பாம் சிவத்தின் அருநெறி வழியாய்
மன்பதை ஒருமை மன்னுறக் கண்டனன்
உலகம் ஒன்றே உயிரும் ஒன்றே
தளையும் ஒன்றே தலைவனும் ஒன்றே
அளியும் ஒன்றே அவனும் ஒன்றே
என்ற மெய்யுணர் வெய்திய சீலன்
நனிதவம் புரியும் இராமச் சந்திரன்
பனிமலர் அன்னை பரமனார் காப்ப
வாழ்க வாழ்க! வரம்பிலா நாளே! 24

வெண்பா

நாண்மலரும் பூக்களே நீவிர் அறியீரோ
வாணகை யான்இராமச் சந்திரன் - பூணுகின்ற
புன்னகையும் சித்தாந்தம்! பேச்செல்லாம் தத்துவங்கள்!
சொன்னவுரை வேத மென? 25

கலித்துறை

எனவே உரைப்போம் இராமச்சந் திரன்தான் இணையிலாத
முனைவன் தமிழின் மலிதவப் புதல்வன் மதியணிவோன்
அனையென் றருளும் அருட்டிறம் பெற்ற அருமகன்தான்
வினையொன் றிலாததோர் வீடடைந் திட்டான்
இப்பிறப்பே.
26

விருத்தம்

பிறந்துயிர்க்கும் வாழ்வினிலே சீவமுத்தி பெற்றான்
பிறருக்காய் வாழ்கின்றான் தன்னுடம்பு கொண்டே
பிறைசூடி புகழ்பேசி புவியினையே காப்பான்
பொருளொன்றும் புகழொன்றும் தனக்கென்றே
நாடான்
இறைநாட்டம் தனக்காக ஏக்கமொன்றும் இல்லான்
எல்லாமே துறந்தவன்த மிழைமட்டும் துறவான்
கறைகண்டன் மைந்தனிவன் வையத்தைக் காப்பான்
கவின்இராமச் சந்திரன்தான் கடவுளெனும் சீரான்!
27

அகவல்

சீரார் புலவன் இராமச் சந்திரன்
ஏரார் தமிழில் இயற்றிய பணிகள்
இறும்பூது பயக்கும் இயல்பின ஆகும்
செய்யா வினையைச் செய்திடல் ஆனான்!
துணியா இடத்தில் துணிந்தவன் ஆனான்
திருவா சகம்எனும் திருநூல் தன்னை
மணிவா சகர்தாம் பாடிய பின்னர்
அம்பலக் கூத்தன் தன்பெய ரான
திருச்சிற் றம்பல முடையான் என்றே
கைச்சாற் றிட்டே மறைந்த பின்னர்

சொல்லொணாப் பெருமை திருநூல் எய்திடும்
மறைநூல் என்றே மாண்பினர் போற்றினர்
இறைநூல் என்றே எல்லாரும் ஏத்தினார்
உயர்நூல் அதற்கே உரைசெய அஞ்சினர்
அத்தகு பீடுடை அருமறை தன்னை
வித்தகன் ஆங்கில வடிவில் ஆக்கினான்
அதுமட்டு மின்றி அதனோ டியைந்த
கோவையார் என்னும் கோதில் நூலை
மேவிய வையம் வியத்தக வெய்த
ஆங்கில மொழியில் அழகுற ஆக்கினான்
ஆங்கிலப் புலவர் ஆசர்என் பாரும்
தீங்கிலாப் புலமையைத் திகழ்ந்திடப் புகழ்ந்தார்
பிறநாட் டார்தாம் போற்றிட வேண்டும்
என்னும் பாரதி கனவு பலித்ததே!
இராமச் சந்திரன் எழில்முடி தன்னில்
மற்றொரு மணியாய் மிளிர்ந்திடும் இதுவே! 28

வெண்பா

இதுவோ வழியென் றியம்பிய ஆசான்
நதிமுடி அண்ணல் அடியே - கதியென்று
திண்ணமாய்ச் சொன்ன திருவாளன் என்றென்றும்
மண்ணினில் வாழ்க மகிழ்ந்து. 29

கலித்துறை

மகிழ்வைத் தருதல் மறைகளின் நோக்கம் மனிதரவர்
இகழ்தரு வாழ்வை இடறி நலன்பெறல் இவ்வுலகில்
திகழும் சமயம் உரைக்கும் திறனதாம் திண்ணியன்தான்
புகழுற வாழ்ந்து பொலிந்திடு ஞானம் பிறங்கினனே! 30

விருத்தம்

பிறங்கிடு சமயங்கள் பலவும் அறிந்துபின்
பெருஞ்சமயம் சைவம் என்றறிந்தே
பெருமைகொளு முனிவநின் வாய்தான்
பொன்னுமிழும் பேறு கொள்ளும்!

கறங்கெனவே ஈசனின் கவின்பாடி மகிழ்கின்ற
காட்சியது கண்டு நின்றோம்!
கண்ணியனே நின் சீர்த்தி என்றுமே
காலமெனும் வெள்ளம் நீந்தும்!

அரங்கினிலே மிளிர்ந்திடும் ஆன்றோர்கள் போற்றிட
அரியதொரு பெருமை கொள்ளும்!
அன்பனேநின் வண்மைவோர் அளவோ!
அதிசயம் ஈதல் லதெதுவே!

மரங்கள்வளர் பொழில்சூழ்ந்த நெய்த்தானம் வந்துதித்த
மாண்புமிகு இராமச் சந்திரனே!
மலிதிரையின் வேணியன் காக்க!
மலிபுகழும் நீட வாழி! 31

அகவல்

வாழிய செல்வ! வாழிய அறிஞ!
ஆழிசூழ் உலகில் அரும்பணி ஆற்றி
முன்னுற நின்றனை! மேன்மைகொள் சால்பினை!
தேன்மொழி கொண்ட திருநூல் பலவுடன்
தன்வாழ் விணைத்தே தனிவாழ் வுற்றனை!
அன்னவை பயில ஆயிரம் ஆண்டுகள்
மன்னிய தவந்தான் மெய்த்துணை ஆகும்!
மன்னவன் உனக்கே மதிசடை அண்ணல்
துன்னிடு அருளும் ததைந்திடும் அதனால்

பயிற்சியும் வந்தது புலமையும் வந்தது
தெள்ளத் தெளிந்த திருவுடை ஞானம்
வாய்க்கப் பெற்ற வரமும் வந்ததே!
ஆங்கில மொழியில் அமைந்த நூல்கள்
சேக்கு வியர் மற்றும் மிலிட்டன் போன்ற
யாத்த கவிதையில் இன்பம் கொண்டாய்
வோர்ட்சு வொர்த்திடமே விருப்பம் கொண்டாய்
பைரன் செல்லி கீட்சும் எழுதிய
உணர்வியல் கவிதையில் உருக்கம் கொண்டாய்!!
மனதைக் கவரும் மாண்புடைக் கவிதைகள்
தனக்கென வேண்டா! தமிழே வேண்டும்!
எனும்உணர் வாலே ஏற்றனை தமிழை!
உன்னுதற் கரிய உணர்தற் கரிய
சித்தாந்த நூல்களை செம்மையாய்ப் பயின்றே
ஆற்றிய தொண்டே அளவிடற் கரிதே! 32

வெண்பா

அரிதான செய்தி அறிவீர் புலவீர்
ஒருபுறம் பாரதி மற்ற - புரத்தில்தான்
சித்தாந்த நூல்கள் சிறப்புடையான் கொள்வானாம்
வித்தகத் தன்மை விளங்கும். 33

கலித்துறை

விளங்குஞ் சுடரென வான்புகழ் கொண்ட விரிபுலவன்
களங்கமில் நெஞ்னாய் கவன்வளத் தாலே கடன்களையே
துளக்கமாய் ஆற்றியே தன்புகழ் நிறீஇ துலங்குகின்றான்
வளப்பமார் வாழ்வு பிறர்தமக் கீந்தனன் வண்மையினால்.
34

விருத்தம்

மைவண்ணம் கொண்டவண்ணம் மால்வண்ணப் பேற்றை
மனவண்ணம் குடிவண்ணம் மயங்குவண்ணம் ஆவான்

பொய்வண்ணம் இலாவண்ணம் புகழ்வண்ணம் கொள்வான்
பூவண்ணம் பாவண்ணம் காண்வண்ணம் ஆவான்
செய்வண்ணம் எனுவண்ணம் ஊர்வண்ணம் ஆகும்
சிவவண்ணம் எனுவண்ணம் முன்வண்ணம் ஆக
நெய்வண்ணம் தானவண்ணம் நேர்வண்ணம் கொள்ளும்
நீள்வண்ணம் இராமச்சந் திரன்என்பான் வண்ணம். 35

அகவல்

வண்ணம் மிக்க வளர்தமிழ்ப் புலவன்
பண்ணின் இனிய பான்மொழி உடையான்
எண்ணம் சிறந்த இயல்புடை யாளன்
நண்ணிடு வோர்க்கே நல்லன செய்வான்!
கண்ணியன் நல்லன் கடவுள் அடியான்!
செந்தமிழ் நாடும் செந்தமிழ் மொழியும்
செய்த தவத்தால் சீருற வந்தோன்
முந்திய பெருமகன்! முத்தமிழ் அறிஞன்!
வழக்குத் தொழிலை விட்டு விட்டு
முழக்கு தமிழின் மொய்ம்பினில் நின்றான்!
கோயில் கண்டு சிறப்புறச் சென்றே
அவன்தான் வணங்கும் அன்பு கொண்டான்!
பல்கலைக் கழகம் பரிந்துவந் தேத்த
நல்கிய அறிவின் நன்கொடை யாளன்
எத்துறை எனினும் அதனில் அறிவு
மெத்தவே கொண்ட மேதை ஆவான்!
சித்தந் தெளிந்த சிறப்பினன் ஆவான்
முத்தமிழ் பயின்ற அண்ணல்
இத்தரை தன்னில் என்றும் வாழ்கவே! 36

வெண்பா

வாழ்வின் பொருளை வளமுறக் கற்றதனால்
போழும் இருசுடர் போலாவான் - தாழ்வின்றி
என்றும் பணிசெய்யும ஏந்தலான் எந்நாளும்
மன்னிட வாழ்க மகிழ்ந்து. 37

கலித்துறை

மகிழ்செய் நூல்கள் மதியினில் தோய மிகுத்திடலால்
அகழ்கடல் போன்ற அரும்புலன் பெற்ற அறிஞனவன்
தகழி எனஒளி வீசி தரணி விளக்கிடுவான்
புகழனார் செய்கை பெருவியப் பாக்கிடு பெற்றிமைத்தே.
38

விருத்தம்

பெற்றியும் சால்பும் பிறங்கிடு மேதை
பெரியவர் போற்றும் திறமிகு சாதனை
உற்றிட நிற்கும் ஒருபெரு மனிதர்
உலகமும் வாழ ஒளிரும் வழியினை
தற்குறு பாதை எனத்தெளி கின்ற
தருவென விளங்கும் அளியினைக் கொண்டிடும்
முற்படு சீலர் மிகுபுலன் கொண்ட
மிளிர்ஒளி விளக்கதன் மேன்மை யினாரே! *39*

அகவல்

ஆர்த்திடும் தமிழ்நா டடைந்த பேற்றால்
கார்மழை எனவரு கருணையின் உருவன்!
நேர்வழி வாழ்வில் நிறையுறக் கொண்டான்!
பார்மிசை தமிழால் பெரும்புகழ் பெற்றான்!
தான்பிறந் திட்ட தண்ணிய மண்ணை
வான்புகழ் நிலைக்கு யர்த்திய வள்ளல்!
எல்லாக் கலையும் இனிது கற்று
வல்லாங்கு வாழ்தும் எனவெண் ணாது
தன்திருப் பணியை தமிழுக் களித்தோன்!
பழிபிறங் கிடாத பழந்தமிழ்க் குடியினன்!
இழிவன நினையான் இமயத் தொத்தான்!
காவிரி மைந்தன் கன்னி மாக்கடல்
கூடுந் துறைபோல் கவினிய நெஞ்சினன்!

பூவிரிப் பாக்கள் பூத்த மனத்தினன்!
மேவியோர் காக்கும் மேன்மை கொண்டவன்!
ஆவினை ஒத்த அருமை மிக்கவன்!
தேவியை வணங்கும் திண்டிறற் குழந்தை!
நாவினில் கலைமகள் நற்குடி கொண்டவன்!
மதவெறி இல்லா மாண்பினன் எனினும்
தனமதம் போற்றும் தகுதி மிக்கவன்
மதந்தான் பெரிதா மொழிதான் பெரிதா
எனும்வினா தமக்கே ஏற்ற உரையாய்
இரண்டையும் போற்றும் இதயம் கொண்டவன்!
நலலவர் துணைவன் நடுநிலை மிக்கான்
அடுக்கிய புகழ்கொள் அரியவன் ஆகும்
இராமச் சந்திரப் புலவரை
வாழ்த்துதல் எமக்கு எளிதே ஆகா
அன்னவன் தானும் என்றும்
காவிரி மணலினும் பலவென வாழ்கவே!! 40

- முனைவர் சாமி. செல்வவிநாயகன், பேராசிரியர், கல்வியியல் துறை, சாஸ்த்ரா பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வாழ்த்துப்பா

சந்தக் கவி நா.இராமசுவாமி

(சேக்கிழாரடிப்பொடி அவர்களின 76 ஆம் பிறந்த நாளில் பாடிச்சூட்டிய பா)

தஞ்சை என்னும் மந்தி ரச்சொல்
தமிழ கத்தில் ஓங்கி நின்று
தனிப்பு கழ்தான் பெற்ற தன்மை எண்ணுவீரே
செஞ்சொல் வேத நமச்சி வாயன்
நெஞ்சு நிற்க நெஞ்சு வந்த
தஞ்ச மென்றார் தாங்கி நின்ற ராஜராஜன்

மஞ்சு சூழம் உயர மான
மலைகள் நாணப் பிரக தீசர்
மகுட மான பெரிய கோயில் தந்ததாலோ
விஞ்சு சைவ சுத்த அத்து
வைதம் சார்ந்து தொண்டி யற்றும்
சேக்கி ழார டிப்பொ டீயும் வாழ்வதாலோ

நெஞ்சை யள்ளும் நூல்கள் ஆக்கித்
தெளிவு நூல்கள் மொழிபெ யர்த்தும்
ஞான மார்க்கம் காட்டு மிவரும் பெரியகோயில்
தெய்வச் சேக்கி ழார்பு ராணம்
திருமு றையின் கவச மென்று
தெரிய வைத்து உயர வைத்த அறிவினெல்லை

துஞ்சு கின்ற இந்து மாக்கள்
சுயசொ ரூபம் உணர்வ தற்குச்
சத்ய நூல்வ ரைந்த தூய மனிதநேயர்
தஞ்சேய் பேரர் துணைவி யோடும்
தரணி போற்றக் குறைவி லாது
நூறு ஆண்டின் மேலும் வாழ வாழ்த்துவோமே.

பெருமங்கல வாழ்த்து

வித்துவான் தி.சா.கங்காதரன்

மயங்கிசை வண்ணக ஒத்தாழிசைக்கலி

வம்மின்ந மரங்காள்! வாழிசைநம் கேண்மையன்,
உம்மை வினையுய்த்த ஓங்குயர்நற் பண்பன்,
எழுமையும் வியாச்சீர் இவ்வொருமை வேட்ட
கெழுமிய நன்றாற்றும் கேழில் மனமாண்பன்.
சைவப் பயிர்தழைஇய தெய்வத விச்சையின்
தைவந்த சேக்கிழார் தாவில் அடித்துகளா
ஏய்ந்த புனைபெயரன், வாய்ந்த பெருஞ்சைவன்,
ஆங்கிலம் நற்றமிழ் ஆய்ந்துணர் வித்தகத்தாற்
பாங்கினிற் பன்னூல் படைத்தமொழி பேர்ப்பாளன்,
சூழ்வாங்கு சூழ்ந்து தொழும்பான்மைச் சொற்பணியும்
வாழ்வாங்கு காட்டுநற்கு, வந்து பிறந்தன்றால்,
ஆ! ஆங்கு எழுபானா றியாண்டு. (தரவு)

ஐய! கேள்
உலகாள வுறுமொழியாம் உயராங்கில மொழிநடையுள்
பலகாலும் திளைத்தநின் பெரும்புலமை பழகுதமிழ்
நிலவியபா ரதிப்பாவின் நீர்மையுள் மூழ்கியெழக்
குலவியசெந் தமிழ்க்கடலிற் குளித்திடவும் கூட்டிற்றால்;
மொழிபெயர்ப்புக் கலைநுண்மை மொழிப்புலம்
இரண்டனையும்
பழுதயரப் பயின்றார்க்கே பயப்பதெனும் வாய்மைநின்
எழுத்துரைப்பத் தமிழ்ப்பல்கலை ஈந்திட்ட நின்பனுவல்

வழுத்துரைக்குத் தமிழ்வையம் வாய்த்தகரி உய்க்குமால்;
நற்றிணை முதலாக நவில் பனுவல் திறம்நாடும்
சொற்றிற மொழிபெயர்ப்புத் துறைபுகுநர் அறிஞர்க்கு
முற்றிட வேண்டுவழி மொழிநடையும் உதவிடுவான்
கற்றநின் கலைஞானம் கைகொடுத்தே யூக்கிற்றால்;

(தாழிசை)

அதா அன்று,
அவனருள் வழிவரு அருமறை மரபிடைத்
தவலரு வினைநலம் தவிர்வில் பயத்தலின்,
மனைவளர் மகிழ்துணை மருவிட இறைவிழி
யிணைவளர் அளிமிகும் இவன்வயின் பெரிதென;
'அறிவறி மகநலம்' அரியன பலவுளும்
பெறவரி தெனுமுரை பெரிதிவண் இறைநலம்
உறைதலின் அனைமக வுயர்திரு கெழுவிட
இறையொரு குறையில திவன்வயின் இனியென;
அறிவொடு பிறநலம் அனையவும் அவனருட்
செறிவோடு விளைதலின் திறனறி வினைபல
விழுமிய பணியமர் விறலினர் மகநலம்
கெழுமிய திருவினர் கிளைமகார் இனிதென

(அராகம்)

இன்ன முகமன் இசைத்திடக் கேளிர்முன்
நன்னகை கோட்டியே நாணினைமன் நம்பி;
கலைவாய்த்த சீர்பல காட்டிய கற்றார்முன்
தலைசாய்த்துச் சால்பினால் நாணினைமன் நம்பி.

(பேரெண்)

குரிசில்!
தருமை யாதீனத் தணிமை சார்ந்தனை;
அருமைய சைவ ஆகமம் ஆர்ந்தனை;
பெருமையின் கண்டிகைப் பேரணி பூண்டனை;
உரிமையின் நீற்றணி ஒருவா தாண்டனை.

(அளவெண்)

சாத்திரப் பாடம் சாற்றினை;
தோத்திரப் பாடல் சூழ்ந்தனை;
பாத்திரம் நாடிய பான்மையை;
சூத்திரம் தேடிய சொல்லினை;
திருமுறை வாழும் நெஞ்சினை;
அருமறை சூழும் அஞ்சினை;
தருமுறை அவனெனத் தாழ்குவை;
வருமுறை இவணென வாழ்குவை.
(இடையெண்)

பெருமைநின் காட்சி;
அருமைநின் மாட்சி;
அறிவுநின் தேட்டை;
செறிவுநின் கோட்டை;
தோற்றம்நின் சிவமே;
ஏற்றம்நின் பவமே;
அகநலம்நின் முற்றவம்;
மகநலம்நின் நற்றவம் (சிற்றெண்)
(இவை நான்கும் அப்போதரங்கம்)

எனவாங்கு,
விராஅய சீர்த்தியை இராமச் சந்திர!
பெருமங் கலமாம்
பிறப்புயர் நாள்வயின் சிறப்பயர் நமரேம்
நிவந்தநின் சீர்பல உவந்தனம் கிளப்பக்
கிளவாதெஞ்சிய வுளவாம் பற்பல!
பொறையோ டமைதி நிறைவோ டன்பென,
கலைத்தருக் கின்மையே மலைத்திடு நினைவென,
ஈத்துமகி ழின்பே சீர்த்தமாண் நுழைபுலம்
இனையபன் னூறு நினையவு மரிய, நின்
நூறணி விழாவிடை நுவன்றிட
ஆறணி வேணியன் அருட்டுணை நிவீஇயர்! (சுரிகதம்)

சித்திரகவி

பாவலரேறு பாலசுந்தரனார்

சிவனவன் யாழ்தமிழ்த் தாயை யேத்துந்
தூய்மையர் வாழிடந் திருத்த லமதே
சிணைதுணை யிலாமெய்ச் சிவவன மொள்ளியது
செய்த வமத னடிவரு கல்விமான்
சொல்வள ருழவிவன் பணியெனு மிசைதரு
திண்ணி யன்புகழ் வளர்க
தி.நா.இராமச் சந்திரனார் வாழ்க.

நயமிகு பண்பனல் லாங்கில மாக்கிழான்
தூய அன்பார்ந்த மேலவர் மேபரி
சேசிவப் பணிசெய் அடியவன் திருநெறி
பிடித்தொ ழுகு=நற் பெருமா னருணெறி
யுரைப்போன் வடிவுபொன் மயத்தோன் பெருமா
னார்திரு மொழிமெய்ப் படிவே தி.ந.
இராமச் சந்திரனார் வாழ்க
பல்லாண்டு வாழ்க பல்லாண்டு வாழ்க.

வாழ்த்து

இராஜராஜ சமயசங்கம்

உலகம் விளங்க ஒளிர்கலை திகழ
மலர்தலாம் வாழ்வு மலர்ந்து சிறந்திட
பொன்னி யென்னும் பொய்யாக் குலக்கொடி
காவிரி மருங்கின் கவின்பெற் றொளிரும்

தில்லைத் தானத்து திகழ்ந்த வேதாந்தி
நடராசன் காமாட்சி நற்றவர் பெரியோர்
ஈன்ற செல்வன் இராமச் சந்திரற்கு
காதல் மனையாள் கல்யாணி நங்கையை
வாழ்க்கைத் துணையாய் வதுவை பூட்ட

காதலிரு வரும் கருத்தொரு மித்து
சுரேஷ் கணேஷ் ரமேஷ் மகேஷ்
நால்வர் மக்களை நானிலம் பயந்தனர்
சட்டம் பயின்ற சாத்திரக் கலாநிதி
இராமச் சந்திரன் இயலிசை வல்லவர்

பத்தியில் முதிர்ந்த பழுத்தமெய்ஞ் ஞானி
தும்பிக்கை யானின் துணையைப் பற்றியோர்
ஓமெனும் பிரணவத் துட்பொருள் உணர்ந்து
மண்ணிலே பிறந்த மாந்தரை யெல்லாம்
விண்ணவர் ஆக்கும் வித்தை தெரிந்தவர்

நான்கு வேதம் ஆறு அங்கம்
பன்னிரு திருமுறை பதினான்கு சாத்திரம்

பதினெண் புராணம் இருபத்தெட் டாகமம்
ஓதி அறிந்தும் உறும்வழி காணார்
காஞ்சிப் பெரியவர் கழலடி தொழுது

தருமை யாதினம் தண்ணிழல் அமர்ந்தவர்
மும்மலம் அகற்றும் மூலப் பொருளாம்
செம்மை சிவநெறி தேர்சிவ நேசர்
உணர்வுகள் போய்வந் துலவு வதற்கு
திருமுறை நெறியே சிறப்பெனக் கண்டவர்

கடலே அலைகளாம் அலைகளே கடலாம்
சத்தியே சிவமாம் சிவமே சத்தியாம்
ஒன்றிலே ஒன்று அன்றிவே றில்லை
கடலே அலைகளாய்க் காண்பது போல

பரமே சிவமாய்ப் பார்த்திடு கின்றோம்
இறப்பும், பிறப்பும் இல்லைநம் கையில்
சரியை கிரியை ஞானயோ கங்கள்
அணிமா முதலா அட்டமா சித்திகள்
அவனை அடையும் அத்துவாக் களாகும்

இறைத் தவங்கள் இன்னதென் றறிந்தவிவர்
தஞ்சையம் பதியின் தனிப்பெரும் சொத்து
இறையருட் செல்வம் இலங்கிடும் தஞ்சையின்
பெரு வுடையார் பெரிய நாயகி அம்மை
திருவடித் தாமரை அடியினை வணங்கி
பல்லாண்டு பல்லாண்டு வாழ்கென வாழ்த்துதல்

இராசராச சமய சங்கத்தினர் தாமே.

AN INFANT VOICE

Prof.S.A.Sankaranarayanan

(On the occasion when civis Tanjore sing TNR's glory on 13.02.1998)

I

An infant voice meek and fine
Lisping beneath my teacher's feet
Loving to be in a demesne
Of a cover of sephirotic trees
Adance in a tinker - shuffle
To sieve myself microfined
And scatter my spores to the sky
I was.

II

A river cave in an alluvia
Or a well echoing the chime
From a temple nearby faraway!
(Tatdhoore Tadhantike)
Following the chime in a word
Touring some via siddhanta
Turning in memory those sancta - figurines
Three and sixty that gentler hands wrought
In a vest of lustrine Ash-
That left me with a proof

Under a temple corridor's roof
I was.

III

Hearing Trilokam's words,
Those mantric - flowers of words,
Quoted off between meanwhiles,
Waiting as a code - script
To Unfold its uplifted head
and flutter as a flower petall's gold
For years Iremained Gene - ially;
My teacher showed him-
A day with Him
And there, where there is no there there
An icon of memory spoke
In an outright outburst
Like a cherub parting its breast.

IV

I felt suckled with light
Of Bharati, Rumi, Y - gasset
And felt rolling up the beach
On the sea of philosophy
yet anchored in thought
I pour'd o'er many
From Plato down to a Kazantztzaki;
Down to a Husserl or Heidegger!
Names all skirted as blackbodies,
Radiating for me to lean after a touch
After a sort of a 'dheedsha'
Too fleeting to be captured
Yet vastly transmogrifying
This poor me just wet with light
With light as of a teachyon universe-

And I sped from diogenes to Gadamar
From Teilhard to Tillich
Only to be turn - turtled - in - doubt.
Now thrown, over thrown out of a life
Into a meontic blind freedom
Blind, Kannappan - blind
Leaving everything behind.

V

Suddenly round me were precipices!
Roads twined, I felt the mount!
The planes cheated all Geometry!
Calculus quickened to a new glance!
Astronomy felt the hoof
And dogged my trotting thought!
Knowledge turned fuselage!
I declined cogito ergo sum
For I was given a primer
Straining my fidelity to a mark above
Horizon and Meru;
Rained a stream impalable wherein
I got holy - dipp'd
I got woven, I perpetually bowed;
I got called home,
Lux - Mundi, at his Dust
This Adi - podi, I felt
Like the fabled mongoose
By a divine ruse
Esotericall yat par
On reading a Kovaiar.

VI

This whom, I have in me
Is my looter too!

I don't know my teacher's share!
with my tartar eyes
I read only ink, and inky nothings.
Above me the looter's words
Like chandeliers and jewel fires
Are firmamentally hung
Robbing me my mortal sight
And sacking mine!
I-ness and My-ness
May perish before the pada dhooli!
A sheet of Wittgenstein or Schrodinger
Now looks like a mashed plate
For this old mare of me now!
Should I any longer droop
Over the alien pastures of ignorance?

VII

Welcome sacra lgnoranza!
Like a grass let me rage.
Like sea - weed let me float
Like a tangerine let me rear.
Like a moon - daisy or sweet hay letme straighten up
Into a lamination of holy dread
And grow old hope - soiled in pulver beneath the Feet
I die a little,
How I wish, I am a concomitant
Of them, my teacher and He - Dhooli
And ever listen to their profound hum
In my pericardium.

VIII

My poem is a gesture, no praise,
It is calligraphy atop the temple
And over the rent of Blue

Hieratically True
Be the dust be
Caressingly upon Me
Like pollen from Heaven's bourne
A fall out above mean - sea - level,
Mean - samsara - level
From up above the world so high
From Beteigeuse in the sky.